விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1848)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 23 திங்கட்கிழமை (05.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

## யாழ்.வலய பாடசாலைகள் ஏப்.19ஆம் திகதியே திறக்கப்படும்



### மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் தவணை ஆரம்பிக்கும்போதே யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்துள்ளார். 19

ஜோசப் ஆண்டகைக்கு அனுதாபம் தெரிவித்து

## தமிழர் தேசத்தில் இன்று துக்க தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழினத்துக்காகக் குரல் கொடுத்த மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்றைய தினம் கறுப்புக் கொடி கட்டி துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆண்டகையின் மறைவையொட்டி அவரால் தமிழ்த் தேசியத்திற்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக இன்று திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்துகின்றோம என வடக்கு-கிழக்கு 19

கொரோனா அச்சம்

## இராமநாதன் கல்லூரி தற்காலிகமாக முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி இன்று முதல் தற்காலிக 19

ஐ.நா தீர்மானத்தினை

## அரசு நிராகரிக்கவே முடியாது – சம்பந்தன்

(திருகோணமலை)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தினை இலங்கை அரசாங்கம் 19

## குடத்தனையில் இளைஞன் சடலமாக மீட்பு



19

## யாழ்.மாநகர வர்த்தகர்கள், பணியாளர்களுக்கு 2ஆம் கட்டமாக இன்று பிசிஆர்

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரில் முடக்கப்பட்ட பகுதியிலுள்ள வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலைய பணியாளர்களுக்கு 2ஆம் கட்டமாக இன்று காலை நவீன சந்தைப் பகுதியில் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

கொரோனாவிலிருந்து

## மீண்டார் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொற்றிலிருந்து குணமடைந் 19

## இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியருக்கு கொரோனா

### கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இன்று பிசிஆர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுவில் வைத்திய அதிகாரி பிரிவில் இராமநாதன் கல்லூரியின் 19

## மாகாண முறைமையை இரத்துச் செய்ய முடியாது

### அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபை முறைமையை ஒரு 19

## வவுனியாவிலும் 8 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட் 19

வடமராட்சி கிழக்கில்

## கடலில் விழுந்து இளைஞன் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் நண் 19

யாழ்.சிறைச்சாலையில் 6 பேர் உட்பட

## வடக்கில் நேற்றும் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 12 பேர் உட்பட வடக்கில் நேற்று 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலை மற 19

கொரோனாவால்

## 2 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக நேற்று மேலும் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நாகபூஷணி இராமச்சந்திரன்

பிரம்பரடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகபூஷணி இராமச்சந்திரன் நேற்று முன்தினம் (03.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (சிறாப்பர்) - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த சு.நாகேந்திரர் (கொடிவேலி விதானையார்) - செல்லம்மா (கிராம சபைத் தலைவி - நெடுந்தீவு) தம்பதியரின் அன்பு மருமகளும் இராமச்சந்திரனின் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - நெடுந்தீவு) அன்பு மனைவியும் நாகநாதனின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, அமிர்தரட்ண ராஜா, செல்வரட்ணம் மற்றும் பாலசிங்கம், நவயோகம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, இலட்சுமணராசா, பவளக்கொடி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6461)

இல. 80/7. பிரம்படி லேன்.
கொக்குவில் கிழக்கு.

நா. இராமச்சந்திரன் - 077 895 0209
வே. நாகநாதன் - 076 358 1627
கு. மதன்ராஜ் - 071 240 0001

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



அதிவணக்கத்திற்குரிய

## கலாநிதி இராஜப்பு ஜோசப்

எமது மக்களின் துன்ப துயரங்களோடு
இரண்டறக் கலந்து இறுதிவரை
எமது இனத்தின் அடக்குமுறைகளுக்கு
எதிராக குரல்கொடுத்த மனிததெய்வமே
எமது மக்களின் இதயங்களில்
மதங்களையும் கடந்து நேசிக்கப்படுவீர்கள்.

இறைபதமடைந்த ஒய்வுநிலை ஆயர்
தந்தைக்கு எமது ஆத்மார்த்த அஞ்சலிகள்

(6463)

அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு
DEMOCRATIC ORGANISATION AGAINST OPPRESSION

# 2021 சிறுபோகச் செய்கைக்கான

## பற்றுச்சிட்டை இடல்

கிளிநொச்சி மாவட்டம் குஞ்சுப்பரந்தன் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள கமக்காரர்களுக்கான 2021 இற்கான சிறுபோக பங்கு பற்றுச்சிட்டை இடுதல் 07.04.2021 ( புதன்கிழமை ), 08.04.2021 ( வியாழக்கிழமை ), 09.04.2021 ( வெள்ளிக் கிழமை ) ஆகிய தினங்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை குஞ்சுப்பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**இவ் அமைப்பின் கீழுள்ள அனைத்து கமக்காரர்களும் தவறாது வருகை தந்து பற்றுச்சிட்டைகளைப் பதிவு செய்யுமாறு குஞ்சுப்பரந்தன் கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொள்கின்றனர்.**

(C-1883)

தகவல் :
குஞ்சுப்பரந்தன் கமக்கார அமைப்பு

# NORTH LANKA IIT CITY CAMPUS

## விவசாய வளாகம், நாகபடுவான், நாச்சிக்குடா, பூநகரி.

### பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக நேர்முகப்பரீட்சை நடைபெறும்

1. விரிவுரையாளர்
   தகுதி: A.I, B.Sc., M.Sc., Ph.D. in Agriculture

2. பின்வரும் விவசாய உற்பத்திகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
   - வெங்காயம்
   - உழுந்து
   - மிளகாய்
   - கச்சான்
   - மஞ்சள்
   - இஞ்சி
   - கத்தாளை
   - வெள்ளைப்பூடு
   - மரக்கறி வகைகள்

❖ தகுதியும் முன்னனுபவமும் உடையவர்கள் உடனடியாக நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

### B.Sc. in Agriculture Science
### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

தகைமை: A/L

காலம்: 3 வருடங்கள்

(C-1884)

<u>கற்கைநெறி விபரம்</u>


1. தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
2. முழுநேர நேரடிப்பயிற்சிநெறி.
3. பதிவுக்கட்டணத்துடன் மாதாந்த கட்டணம் ரூபா. 10,000 மட்டும்.
4. 2 இலட்சம் ரூபா பெறுமதியான சான்றிதழ் கட்டணம் இலவசம்.
5. சிறந்த விரிவுரையாளர்களின் வழிகாட்டல்.

தொடர்புகளுக்கு:-
T.P.No : 0767504535
Address : Top Floor, People's Bank Building, Stanley Road Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தந்தையே!
ஆயன் இல்லாத மந்தைகளாக
நாம் தனித்து விட்டாலும்
நீங்கள் ஏற்றி வைத்த கலைத் தீபத்தை
அணையவிடாது கொண்டு செல்வோம்
அமைதியாக இளைப்பாறுங்கள்
கண்ணீருடன் விடைதருகின்றோம்
விண்ணிலிருந்து வழிகாட்டுங்கள்.





## 'கலைத்தூது' அருட்கலாநிதி
## நீ. மரிய சேவியர் அடிகள்

(ஸ்தாபகர், இயக்குநர் - திருமறைக் கலாமன்றம்)

மலர்வு: 03.12.1939 உதிர்வு: 01.04.2021

கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக கலை இலக்கியத்துறையில்
தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த
எமது இயக்குநர் தந்தையின் புகழுடல் இன்று காலை 10.00 மணி முதல்
யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.
இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை
6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு
யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகும்.
தொடர்ந்து 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர்
மேதகு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை
தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
அதன் பின்னர் தந்தையின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா
சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இத்தகவல்களை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

(C-1882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கொரோனா அச்சுறுத்தல் மத்தியில் ஐ.பி.எல்

14 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வருகின்ற 9ஆம் திகதி முதல் மே 30 ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்க ஆட்டம் சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதுகின்றன.

ஐ.பி.எல் போட்டிகளுக்காக வீரர்கள் தயாராகிவரும் நிலையில், வீரர்கள் மற்றும் அணி நிர்வாகிகளுக்கு கொரோனா பாதிப்பு ஏற்படுவதால் போட்டி ஏற்பாட்டாளர்கள் கலக்கமடைந்துள்ளனர். கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், போட்டிகள் நடைபெறும் அனைத்து நகரங்களையும் கிரிக்கெட் வாரியம் தீவிரமாக கண்காணித்து வருகிறது. (ஞா)

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ ப. சச்சிதானந்தக் குருக்கள்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கரவெட்டி, தச்சந்தோப்பு, சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் 60 ஆண்டு காலம் குருப் பணியாற்றியவரும் முள்ளியவளை குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆதீன கர்த்தாவும் தற்போது நல்லூரில் வசித்தவருமான சிவஸ்ரீ ப. சச்சிதானந்தக் குருக்கள் நேற்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனின் திருப்பாதக் கமலங்களை அடைந்து விட்டார்.

அன்னார் பாகீரதி அம்மாளின் அன்புக் கணவரும் திவாகரன், பிரபாகரன் (இந்திய துணைத் தூதரக அலுவலர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜலக்ஷ்மி (ஆசிரியர் - சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு), சீதாலக்ஷ்மி (சிரேஷ்ட விரிவுரையாளர் நடனத்துறை - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும் பரத், அக்சைஷ, ஸ்நேஹா, அபிஷேக், நிதேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட்கிழமை காலை 10:30 மணியளவில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (6465)

இல. 7/9A, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். 077 759 9096 / 077 757 4628

தகவல்:- குடும்பத்தினர்

## தேசிகனின் அரைச்சதம்; T.YMHA 2வது சுற்றுக்கு தகுதி





கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் முதலாவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் T.YMHA அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தாஸ்ரார் அணியினர் முதலில் துடுப் பாட்டத்தை தெரிவு செய்தனர்.

தனுஸன்-61, சிந்துஜன் ஆட்டமிழக்காது-20 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் T.YMHA சார்பாக அருண்ராஜ், யோன் சரோன் தலா 03 இலக்குகளையும் சன் ஜீவ்குமார் 02 இலக்குகளையும் கீரன், கோபிநாத் தலா 01 இலக்கினையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய T.YMHA அணி 21.5 ஓவர்களில் 05 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. தேசிகன்-53, சுதாகரன் -13, அருண்ராஜ் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஸ்கந்தா ஸ்ரார் அணி சார்பாக புருசோத்மன்-01, தரனிதரன்-02, சிந்துஜன்-02 இலக்ககளை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற T.YMHA அணி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கே.சி.சி.சி. அணியை எதிர் கொள்ளவுள்ளனர். T.YMHA அணியை சார்ந்த அருண்ராஜ் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (4)



# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

**தோற்றம் : 10.12.1951 மறைவு : 04.04.2021**

அருணர் வளவு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் ராணி பவன் கம்பர்மலையை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தர்மலிங்கம் நேற்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் அருந்தவராணியின் அன்புக் கனவரும் சர்மிலன் (Quantity Surveyor, Qatar), கிரிஷாந்தி (QA Engineer, canada), தனசாந்தி (Management Assistant, University of Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்துரு (IT Consultant, Canada), செந்தூர் ( Senior Engineer, National Water Supply and Drainage Board, Vavuniya) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியள்வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும், ஏற்றுக்கொள்ளவும். (C-1886)

ராணிபவன்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

076 369 8282
(WhatsApp) +9477 644 1986

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிருந்த சர்வதேச விசாரணை பொறிமுறையை

# தடுத்து நிறுத்தியது நல்லாட்சி அரசே

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள

(கொழும்பு)

**2014க்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் எதிர்ப்பையும் மீறி சர்வதேச விசாரணை பொறிமுறையொன்றை இலங்கைக்கு எதிராக முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தது என்றும் 2015 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நல்லாட்சி அமைந்தமையால் இலங்கைக்கு எதிரான சர்வதேச நடவடிக்கையைத் தடுக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது என்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**



பத்தரமுல்லவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் 2009 இல் நிறைவடைந்ததன் பின்னர், பல உலக நாடுகள் வாழ்த்துக்களை தெரிவித்தன. மறுபுறம் ஒரு மீறல்களை மையப்படுத்தி விசாரணைகளுக்கும் வலியுறுத்தின.

2014க்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் எதிர்ப்பையும் மீறி சர்வதேச விசாரணை பொறிமுறையொன்றை இலங்கைக்கு எதிராக முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

அதிர்ஷ்டவசமாக 2015 இல் ஆட்சி மாற்றம் இடம்பெற்று இலங்கைக்கு எதிரான சர்வதேச நடவடிக்கையை தடுக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றது.

ஜெனிவா சென்று அப்போதைய ஐ.நா. மனித உரிமை ஆணையாளராக செயற்பட்ட ஷெயிட் ராட் அல் ஹுசைனை சந்தித்து ஆட்சி மாற்றம் குறித்தும் ஆரோக்கியமானதும் நம்பகமானதுமான இலங்கையின் முன்னெடுப்பு திட்டங்கள் குறித்தும் தெளிவுபடுத்தினேன்.

இதன்போது குறிப்பாக இலங்கை குறித்து சர்வதேச விசாரணை பொறிமுறைக்கான தீர்மானத்தை இம்முறை சமர்ப்பிக்க வேண்டாம் என்றும் கால அவகாசம் தருமாறும் கோரினேன். இதனை ஏற்றுக்கொண்டு எமக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

உண்மையாகவே இந்த காலப்பகுதியை இலங்கையின் இராஜதந்திர கொள்கையின் பொற்காலமாகவே கருத முடியும்.

இதன் பின்னரே 2016 இல் 30/1 தீர்மானத்தை முன்வைத்து இணை அனுசரணை வழங்கினோம்.

சர்வதே சமூகம் இலங்கை மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக பல நன்மைகள் கிடைக்கப் பெற்றன.

தடைப்பட்டுப் போயிருந்த ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை என்பன கிடைக்கப் பெற்றன.

உள்நாட்டு மக்களை ஏமாற்று வதைப் போன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்றிவிட முடியாது. பொருளாதாரம், சர்வதேசம் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கை தற்போதுள்ளது.

சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்படும் ஆபத்தான நிலையில் இலங்கை உள்ளது. இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (4)

# மரண அறிவித்தல்



## அமரர்

## பரமநாதன் குலநாதன் (குலம்)

இல. 22, பாலிநகர் வவுனிக்குளத்தை பிறப்பிடமாகவும் நோர்வே Baerum நகரத்தை வதிவிடமாகவும் கொண்ட பரமநாதன் குலநாதன் (குலம்) 25.03.2021 வியாழக் கிழமை அன்று நோர்வேயில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் கந்தையா பரமநாதன், பரமநாதன் காந்திமதி தம்பதியரின் அன்புமகனும் ஜமுனாறாணியின் அன்புக் கணவரும், சாரணன், சாருசன், சுவாதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வவுனியா எல்லப்பர் மருதங் குளத்தைச் சேர்ந்த அமரர்கள் சுப்பிரமணியம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகநாதன், தவநாதன், இந்துமதி, மலர்மதி, கைலைநாதன், அமரர் அருள்நாதன், மதிவேணி, தவநேசன், சாந்திமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சிவராசா, கருணாநிதி பத்மநாதன், சிறீதரன், அமரர் உலகநாதன், அகிலன், மதுரராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.04.2021 நாளை செவ்வாய்கிழமை இலங்கை நேரப்படி பி.ப 3.00 மணியளவில் Baerum Norway இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் மற்றும் துயர் பகிர்ந்தோர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.22, பாலிநகர்,
வவுனிக்குளம்.

தகவல்:
பரமநாதன் குடும்பத்தினர்.
0773595644, 0779363067
0779019842, 0771112086

(C-1881)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சைக்கு வருவோரில் 80 வீதமானோர் யாழ்.போதனாவிற்கு அனுப்பப்படுகின்றனர்

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கூடத்தினை ஆரம்பிக்கும் பட்சத்தில் விபத்துகளில் சிக்கும் பெரும்பாலானோரை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய தேவை ஏற்படாது என வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிகளை விரைவில் பூர்த்தி செய்து சத்திர சிகிச்சைக்கூடத்தினை ஆரம்பிக்க சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகம் முயற்சித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அரச நிதிஒதுக்கீடு மூலமாக பல மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சத்திர சிகிச்சைக்கூடத்தின் பணிகள் நிறைவடையாமல் வருடக்கணக்கில் இழுபறி நிலையில் காணப்படுகிறது.

இதனால் வைத்தியசாலை நிர்வாகம் குறித்த பணிகளை முடிவுறுத்தி சத்திர சிகிச்சைக் கூடத்தினை ஆரம்பிக்க வழி ஏற்படுத்துமாறு பல்வேறு தரப்பினரையும் கோரி வந்தது.

அதனடிப்படையில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக அண்மையில் இணைய வாயிலாக ஓர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த சந்திப்பில் வட பிராந்திய சுகாதாரப் பணியாளர் வைத்தியர் கேதீஸ்வரன், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சுதோகுமார், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் கந்தசாமி, தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் பிரித்தானியா கிளை தலைவர் புவிநாதன் மற்றும் தென்மராட்சியைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகள் இணைய வாயிலாக பங்கேற்றிருந்தனர்.

குறித்த சந்திப்பில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்திற்குள் அமைந்துள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிகளை முடிவுறுத்தி சத்திர சிகிச்சைக்கூடத்தினை இயங்க வைப்பதற்கு உதவி செய்வதாக ஆதார வைத்தியசாலை அத்தியட்சகரிடம் தெரிவித்தனர்.

அத்துடன் வேறு பல புலம்பெயர் உறவுகளும் தாமாக முன்வந்து சத்திரசிகிச்சைக் கூடத்தினை ஆரம்பிக்க தாம் உதவி செய்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது பளை தொடக்கம் நாவற்குழி வரையான பகுதிகளில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்கள் உள்ளிட்ட விபத்துக்களில் காயமடைவோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்றனர். வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாத காரணத்தால் அவ்வாறு சிகிச்சைக்கு வருபவர்களில் 80 சதவீதமானவர்கள் மேலதிக சிகிசைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இதன் காரணமாக நாம் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரை உதவி கோரிய பட்சத்தில் அவர்கள் அதற்கு இணங்கியுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார். (5-6-30)

# கடத்தலை முறியடிக்க முற்பட்ட பொலிஸார் டிப்பர் மோதி படுகாயம்

(நல்லூர்)

வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரைத் தடுக்க முற்பட்ட பொலிஸ் அலுவலகர் டிப்பர் வாகனம் மோதி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் வடமராட்சி வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கிலிருந்து சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்டோர் டிப்பர் வாகனத்தில் மணலை ஏற்றிப் பயணிப்பதாக உள்ளூர் மக்களால் பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதனை அடுத்து பருத்தித்துறை பொலிஸ்நிலைய முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் அஜித் தலைமையில் 6 பேர் கொண்ட பொலிஸ் பிரிவு சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் டிப்பர் வாகனம் வருவதைக் கண்ட பொலிஸார் அதனை மறிக்க முற்பட்டுள்ளனர். எனினும் டிப்பர் வாகனம் உப பொலிஸ் பரிசோதகரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பருத்தித்துறை பொலிஸார் மோதிவிட்டுத் தப்பித்த டிப்பர் மற்றும் சாரதியைத் தேடி வருகின்றனர். (5-6-33)



கொழும்புத்துறையில் தனிமைப்படுத்தப்பட்ட 10 குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் ஆறுமுகம் தர்மகுலசிங்கம் தனது தாயாரின் நினைவாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைத்துள்ளார்.

குறித்த உலர் உணவுப் பொருட்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி குறித்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

(படம்: ரவிசாந்)


# வீதியைப் புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கைதடி தெற்கு பகுதியில் அமைந்துள்ள ஏ-9 வீதியுடன் இணைகின்ற தரவைப்பிள்ளையார் கோயில் வீதியின் ஒரு பகுதி சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் மழை காலங்களில் நீர்தேங்கி நின்று வீதியின் ஏனைய பகுதிகளும் அரிப்புக்குள்ளாகி சேதமடையக் கூடிய நிலைமை காணப்படுகிறது.

அதுமட்டுமன்றி போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்களும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே இவ்வீதியை புனரமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-103)



சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்படி சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி சனசமூகநிலைய மண்டபத்தில் மாபெரும் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

(படம்: ரவிசாந்)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் திருவருள் மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் தேவஸ்தானம் திவ்ய பிரம்மோற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிளவில் வசந்த மண்டபப் பூஜையுடன் ஆரம்பமாகி 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (5-6)

# சுற்றிவளைப்பில் ஒருவர் கைது

(கரணவாய்)

கரவெட்டி மத்தோனி பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய பொலிஸார் நேற்றுமுன்தினம் அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றி வளைத்தார்கள். இதன் போது அங்கிருந்த இளைஞர்கள் தப்பி ஓடினர் .ஒருவர் மட்டும் கைது செய்யப்பட்டார். விசாரணைக்காக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த இளைஞர் விசாரணைகள் பூர்த்தியானதும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

## விலை மனு கேள்விக்கான அழைப்பு
## சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு அமர்த்துதல்

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு அமர்த்துவதற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| இல | விபரம் | இடம் | மீளளிக்கப்படாத பணம் | மீளளிக்கப்படும் பிணைப் பணம் |
|---|---|---|---|---|
| RDHS/Staff Canteen/PPD/ 2021-2022/ NC 05 | ஊழியர்களுக்கான சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு அமர்த்துதல். | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை. | 1000.00 | 5000.00 |

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் விருப்பமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 222 2278/4557.ext20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
3. விருப்பமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் கேள்விப் படிவம் பெறுகைக்கான விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட மீளளிக்கப்படாத தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரத்தினை அலுவலக நாட்களில் 05.04.2021 தொடக்கம் 20.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்து) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் 20.04.2021 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 20.04.2021 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

(C-1870)

தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.



# பதவி வெற்றிடம்

## முகாமைத்துவ உதவியாளர்
(இருபாலாரும்)

**தகைமை**

- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்,
- 01.04.2021 இல் 25 வயது பூர்த்தியாகி இருத்தல்,
- யாழ். நகர மையத்தில் இருந்து 6 Km சுற்றளவிற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல்.

**மேற்குறிப்பிட்ட கட்டாய தகைமைகளுடன்**

- கணினி தமிழ் ரைப்பிங் தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், சிங்களம் பேசும் ஆற்றல்

என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய (தொ.பே இலக்கம் உட்பட) விண்ணப்பத்தை,

**பொது முகாமையாளர்,**
**வலம்புரி,**
**இல. 3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


# விபத்தில் இளைஞன் பலி

(கொழும்பு)

கித்துல்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கித்துல்கல பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் களுகொவுத்தென் கம்பி பாலத்திற்கு அருகில் நேற்றுக் காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. டயகம பகுதியிலிருந்து கொழும்பு பகுதியை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் எட்டியாந்தோட்டை பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கி சென்ற கனரக வாகனம் ஒன்றும் நேர்க்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். (4)

# மன்னார் இளைஞர்கள் தனுஸ்கோடியில் கைது

(இராமேஸ்வரம்)

இந்திய- இலங்கை சர்வதேச கடல் எல்லை ஊடாக தமிழகத்திற்குள் சட்ட விரோதமாக நுழைந்த மன்னாரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் மத்திய பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்றுக் காலை தனுஸ்கோடி அரிச்சல் முனை கடற்கரைக்கு கண்ணாடி இழை படகு மூலம் இலங்கையைச் சேர்ந்த இருவர் சட்டவிரோதமான முறையில் வந்து இறங்கியதாக இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற சுங்கத்துறை அதிகாரிகள் குறித்த இருவரையும் கைது செய்து இராமேஸ்வரம் கடலோர பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டனர். (5-4-285)

# வெடிபொருட்களுடன் நால்வர் கைது

(கொழும்பு)

நாவுல- எலஹெர வீதிக்கருகில் அமைந்துள்ள பகமுண பகுதியில் வெடிபொருட்களுடன் 4 சந்தேகநபர்களை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மேலும் முச்சக்கர வண்டியொன்றில் இருந்தே 20 கிராம் வெடிமருந்து, 3 கிலோ 230 கிராம் அமோனியா, 14 டெட்டனேட்டர்கள் மற்றும் 135 வோடர் ஜெல் குச்சிகள் ஆகியவற்றினை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 47 செவ் 1 சூரி 10 இல் உயரம்: 5'10"
தகைமை/தொழில்: College, ஆசிரியை (அரச)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/11720

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 19 1/4 செவ் 2 சூரி 4 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த மணமகள் பெண்
தொ.இ: B/11721

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: செவ் 8 சூரி 11 இல்
தகைமை/தொழில்: Hospitality & Business Management
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/11723

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 29 1/4 செவ், சூரி 10 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: IT, B Tech, தனியார் கம்பனி மனேஜர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11725

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16 1/2 செவ் 2 சூரி 5 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி B.COM
தொழில் - உடுவில் பிரதேச செயலகம்
எதிர்பார்ப்பு: அரச தொழில், நிறுவனத் தொழில், சொந்தக்கடை, உள்நாடு மட்டும்
தொ.இ: G/2863

பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா: 65 1/2 செவ், சூரி 12 இல் உயரம்: 5.3
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வியாபாரி அல்லது உத்தியோகத்தர், அரச தனியார், சொந்தத் தொழில், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ: G/2886

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 54 1/4 செவ் 3 சூரி 12 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: ICT
எதிர்பார்ப்பு: அழகான நற்பண்புள்ள பெண், வெளிநாடு ஆயின் லண்டன், கனடா, நோர்வே, டென்மார்க், சுவிஸ்
தொ.இ: G/2900

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 5 1/4 செவ் 2 சூரி 3 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி, விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில், விவாகரத்துக்கு ஏற்கப்படும், மணமகள் விவாகரத்து பெற்றவர், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்
தொ.இ: G/2902

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்கு நேரடியாக தீர்வுகள் பெற்றுத் தரப்படும்

## அமைச்சர் டக்ளஸ்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஒரு ங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் கடற்றொழில் அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா 3 நாட்கள் கிளிநொச்சியில் தொடர்ச்சியாகத் தங்கியிருந்து பல தரப்பட்ட மக்களையும் சந்தித்து அவர்களது குறை தீர்த்து வைத்துள்ளார்.

மாவட்ட திறன்விருத்தி பயிற்சி மைய மண்டபத்திலும் பொதுமக்கள் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்து அவர்களது பல்வேறு பிரச்சி னைகளுக்கும் தீர்வுகளை முன்வைத்தார்.

அந்தவகையில் கடற் றொ ழில், விவசாயம், கைத்தொ ழில் முயற்சிகள், கல்வி, நீர் வழங்கல், காணிப் பிரச்சி னைகள், முச்சக்கரவண்டி ஊர் திச் சங்கத்தின் பிரச்சினைகள் என பலதரப்பட்ட பிரச்சினை களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத் துள்ளார்.

மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செய லாளர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணை யாளர், பிரதேசசபை செயலா ளர் உள்ளிட்டவர்களுடன் மக்களின் சில முக்கிய பிரச்சி னைகள் தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் அதிகாரிகளுடன் இணைந்து அவற்றுக்கான தீர்வு களைப் பெற்றுக் கொடு த்தார்.

இலங்கையின் 15 கடற் றொழில் மாவட்டங்களிலும் தமது அமைச்சுப் பொறுப்பு க்களை வகிக்கவேண்டிய பொறுப்பு மிகுந்த சூழ்நிலை யிலும், மாவட்ட இணைத் தலைவர் என்ற ரீதியில் இது போல் இனிவரும் காலங்களில் அடிக்கடி கிளிநொச்சி மாவட் டத்தில் தங்கியிருந்து மக்க ளுடைய பிரச்சினைகளுக்கு நேரடியாகத் தீர்வுகளை வழ ங்கவிருப்பதாக மாவட்டச் செயலக சந்திப்புக்களின் பின் னர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார். (5)

## கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் வர்த்தமானி அறிவுறுத்தல் அரச அச்சகத்திற்கு அனுப்பப்பட்டது

(கொழும்பு)

கூட்டு ஒப்பந்தத்தினை இரத்துச் செய்யும் வர்த்த மானி அறிவித்தலை வெளி யிடுவதற்கான அறிவுறுத் தல்கள் அரச அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக தொழில் ஆணையா ளர் சந்திரகீர்த்தி தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தினை இதுவரை காலமும் கூட்டு ஒப்பந்தமே தீர்மானித்து வந்திருந்தது. தற்போது வேதன நிர்ணய சபையின் விதிகளுக்கு அமைவாக அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு அரச வர்த்தமானியில் அறி விக்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் கூட்டு ஒப் பந்தத்துடன் தொடர்புடைய தரப்பு அடுத்து வரும் கால த்தில் கூட்டு ஒப்பந்தம் அவ சியமில்லை. அதனை இரத் துச் செய்ய வேண்டும் என்று எழுத்து மூலமான கோரிக்கையை விடு த்துள்ளது.

எனினும் கூட்டு ஒப்பந் தத்தில் கைச்சாத்திடுவதற்கு மீண்டும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் செல்வதற்காக முப்பது நாட்கள் கால அவ காசம் வழங்கப்பட்டது. அதன்பின்னர் கூட்டு ஒப்ப ந்தத்தினை இரத்துச் செய் வதற்கான வர்த்தமானி அறி வித்தலை வெளியிடுவதற் கான நடவடிக்கைகள் எடுக்க ப்பட்டன.

அதன்பிரகாரம், தற் போது, தொழில் அமைச்சர் மற்றும் அமைச்சின் செய லாளர் ஆகியோரின் அனு மதி பெறப்பட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடு வதற்கான அறிவுறுத்தல்கள் அரச அச்சக கூட்டுத்தாப னத்திற்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. இந்த வார த்திற்குள் அந்த அறிவித் தலை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயி ரம் ரூபாய் சம்பள அதிகரி ப்பை வழங்கும் வர்த்த மானி அறிவித்தலுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று திங்கட்கிழமை வெளியாக வுள்ளதாக கூறப்படுகின் றது. (4)

## முறைப்பாடுகள் இருப்பின் தொலைபேசி மூலம் அறிவிக்கவும்

### வவுனியா சுகாதாரப்பகுதியினர்

(குருமன்காடு)

வவுனியா வர்த்தக சங்க த்தினருக்கும் சுகாதார பிரி வினருக்கிடையே கலந்து ரையாடல் இடம் பெற்றது. இதில் கொவிட் -19 சுகாதார நடைமுறைகள் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கொவிட் -19 தொடர்பான சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக தொடர்ந்து பின் பற்றுதல் தொடர்பில் வவு னியா மாவட்ட வர்த்தக சங்கத்தின ருக்கும் சுகாதார பிரிவினருக் கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியா நகரசபை கலா சார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.


குறித்த கலந்துரையாட லில் வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் தரம் பிரித்து கழி வகற்றல், உண வகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சுகாதார சான்றிதழ் கட்டாய மாக்கல், கொவிட் - 19 நடை முறை யினை இறுக்கமாக பின் பற்றுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கல ந்துரையாடப்பட்டது. அத்து டன் இதனை மீறுபவர்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

தரம் பிரித்து கழிவகற் றல் நடவடிக்கைக்கு வர்த்தக சங் கத்தினரின் ஒத்துழை ப்பினை சுகாதாரப்பிரிவினர் கோரியதுடன் காலை நேரத்தில் உண வுக் கழிவு களும் மாலை நேர த்தில் பிளாஸ்டிக், காகிதங்கள், கண்ணாடி போன்ற கழிவு களும் நகரசபை கழிவ கற் றல் பிரிவினரினால் எடுத் துச் செல் லப்படும் எனவும் தெரிவிக்க ப்பட்டது.

கழிவகற்றல் தொடர்பில் முறைப்பாடுகள் எவையும் இரு க்கும் பட்சத்தில் 024 -222 2488 என்ற தொலை பேசிக்கு அழை ப்பினை ஏற்படுத்துமா றும் சுகாதார பிரிவினர் தெரி வித்துள்ளனர்.

இக் கலந்துரையாடலில் வவுனியா வர்த்தக சங்க உறு ப்பினர்கள், சுகாதார பிரிவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-6)

## வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நிரந்தரமான பொறுப்பு வைத்திய அதிகாரிகள் எவ ரும் நியமிக்கப்படவில்லை. அதிகளவான நோயாளர்க ளுக்கு சிகிச்சை வழங்கி வரும் வைத்தியசாலை யாக காணப்படுகின்ற கிளி நொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்கு டியேற்றத்தின் பின்னர் இது வரை நிரந்தரமான பொறு ப்பு வைத்திய அதிகாரிகள் எவரும் நியமிக்கப்பட வில்லை.

இந் நிலையில் குறித்த பதவிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுபவர்கள் குறு கிய காலத்திற்குள் வேறு இடங்களுக்கோ அல்லது மேற்படிப்புக்காகவோ வைத் தியசாலைக்கு ஒரு நிரந்தர மான வைத்திய அதிகா ரியை நியமிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடு க்க வேண்டும் என்று கோரி க்கை பல்வேறு தரப்புக்க ளாலும் விடுக்கப்பட்டுள் ளது. (5-315)





கிளிநொச்சி சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சிவேந்திர சைதன்யாவின் நெறிப்படுத்தலுடன் கிளிநொச்சி அறிவியல் கல்வி நிலையத்தினை சேர்ந்த சிறார்க ளுக்கு ஆளுமைவிருத்திப் பயிற்சி பட்டறை, யோகாசன விழிப்புண ர்வு, தியான பயிற்சி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிதி அனுசரணை கதிரேசு பொன் னம்மா அறக்கட்டளை வகிரன் சுதாகரன் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்புடன் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

05.04.2021
பங்குனி 23, திங்கட்கிழமை
அட்டமி முற்பகல் 7.56 மணிவரை
பூராடம் காலை 6.40 மணிவரை
உத்தராடம் பின்னிரவு- 6.02 மணிவரை
சுபநேரம் 12.09-1.39 மணிவரை
இராகுகாலம் 7.39-9.09 மணிவரை
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

வளவன்


மேஷம்

கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், போசன சுகமுண்டு, காரிய அனுகூல முண்டு.


ரிஷபம்

மனக்குழப்பங்கள் அகன்று மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம்.


மிதுனம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்,காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், செய்தொழில் ஆர்வம் கூடும்.


கன்னி

உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.


தனுசு

தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்க-ளால் நன்மையுண்டு.


மகரம்

தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.


கும்பம்

சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணத்தால் பயன் கிடைக்கும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


மீனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

நேர்மையானவர் நம்பிக்கையால் வாழ்வார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை தடையின்றி தொடரும்- பிரதமர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்கும் வரையான கிறிஸ்தவ மக்களின் பொறுமை அளப்பரியது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈராண்டுகளுக்கு முன்னர் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் சிறு குழந்தைகள்



உட்பட 250 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தமை நாம் அனைவரும் அறிந்ததே.

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதியின் முன்னிறுத்துவதற்கு ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கிறிஸ்தவ சமூகத்தினர் எதிர்பார்ப்பது போன்று, தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதியின் முன்னிறுத்தும் வரை விசாரணைகள் தடையின்றி தொடரும். (4)

## தேர்தல் சட்டத்தில் நிலவும்

# குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பான யோசனை இன்று பாராளுமன்றில் முன்வைப்பு

(கொழும்பு)

தற்போதுள்ள தேர்தல் சட்டத்தில் நிலவும் குறைப்பாடுகளை கண்டறிவதற்காக விசேட பாராளுமன்ற குழுவொன்றை நியமிப்பது தொடர்பான யோசனையொன்று இன்று பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கமைய, சபாநாயகரால் குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் 15 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

6 மாத காலப்பகுதியில் குறித்த குழு பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளதாக யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மாகாண சபை தேர்தல்களை நடத்துவது தொடர்பான புதிய சட்டமூலம் குறித்து ஆராய்வதற்காக ஆளும் கட்சி தலைவர்களின் கூட்டம் ஒன்று எதிர்வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கான புதிய சட்டமூலம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்தது.

தொகுதிவாரி மற்றும் விகிதாசார கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு இறுதியாக இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இணக்கம் ஏற்பட்டுள்ளது.

சட்டத்தில் நிலவும் சில குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்காக குறித்த ஆளும் கட்சி தலைவர்களுக்கு இடையிலான கூட்டத்தினை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4)

# கொடுத்த வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை

## தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அறிவுரைகளை கேட்கத் தவறினால் அதற்கும் தீர்வுகள் உண்டு என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். இனம் என்ற ரீதியில் நிர்க்கதியாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.


புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உப்பு நீரில் உருவாகின்றது. உப்பு கரைவதும் நீரில்தான் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த மண் பற்றி மட்டுமன்றி கடல், ஆகாயம், ஜீவராசிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் பற்றியும் பரிந்துரைகள் முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்கள் எம்முன் வாக்குறுதிகளை அளித்து அவற்றை நிறைவேற்றத் தவறினால் அதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த அரசாங்கம் பௌத்த பிக்குகள் முன்னிலையில் பிரச்



சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக அளித்த வாக்குறுதிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என எல்லே குணவன்ச தேரர் குற்றம் சுமத்தியுள்ளார். (4)

# மரண தண்டனை விதிக்க வேண்டும்

(கொழும்பு)

நச்சுப் பொருட்கள் கலந்த தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமென ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலீப் குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொலை முயற்சி குற்றச்சாட்டின் பேரில் இவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும். இந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் அரசாங்கம் தண்டிக்கும் என தமக்கு நம்பிக்கை உண்டு.

இந்த சம்பவத்துடன் ஆளும் கட்சியின் எவருக்கேனும் தொடர்பு இருந்தால் ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களான தாம் உரிய நடவடிக்கை எடுக்க அஞ்சப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆந்தைகளின் மொழி



மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன.

அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் அமர் ந்திருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.

அவற்றின் ஒலியை வெகு நேரம் உன்னிப்பாகக் கவனித்த அக்பர், "இந்த ஆந்தைகளின் மொழி நமக்குப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றார். "பிரபு! அவற்றின் மொழி எனக்குத் தெரியும்!" என்றார் பீர்பால்.

"அப்படியா? பிறகு ஏன் சும்மாயிருக்கிறாய்? அவை என்ன பேசுகின்றன என்று உடனே சொல்!" என்றார் அக்பர்.

"பிரபு! அவையிரண்டில் ஒன்று மணப்பெண்ணின் தந்தை! மற்றொன்று பிள்ளையின் தந்தை! அவை வரதட்சணையைப் பற்றி விவாதம் செய்து கொண்டு இருக்கின்றன.

பிள்ளையின் தந்தை மிருகங்களே இல்லாத நாற்பது காடுகள் சீர் வரிசையாகத் தர வேண்டும் எனக் கேட்கிறது. பெண்ணின் தந்தை தன்னால் இருபது காடுகள் மட்டுமே தரமுடியும் என்று சொல்கிறது," என்றார் பீர்பால்.

தொடர்ந்து, "பெண்ணின் தந்தையான அந்த ஆந்தை மேலும் தனக்கு ஆறு வாரகாலம் அவகாசம் தந்தால், மீதி இருபது காடுகளையும் ஏற்பாடு செய்ய முடியும் என்கிறது," என்றார்.

"இது என்ன உளறல்? மிருகங்களே இல்லாத காடுகள் அதற்கு எங்கிருந்து கிடைக்கும்? 20 காடுகள் தருவதாக அது எப்படி ஒப்புக்கொண்டது?" என்றார் அக்பர்.(தொடரும்)

# மகாபாரதம்




துரியோதனனிடம் நடந்ததைக் கூறியதுடன் பாஞ்சாலி மாதவிடாயிலிருக் கிறாள் என்ற செய்தியையும் சொன் னான். செய்தி கேட்ட துரியோதனன் "மீண்டும்போ" அவளை ஏழு கணத்தில் அழைத்து வா" என்றான்.

தேர்ப்பாகன் தெளிவாக சபைக்குக்கூறினான். "நான் இதுநாள் வரை மன்னன் கட்டளையை மீறியதில்லை. அம்மாதரசி கேட்ட கேள்விக்கு ஆறுதலாக ஒரு சொல் சொன்னால் சென்று அழைத்து வருகிறேன்" என்றான்.

பாகனின் மொழி கேட்ட துரியோதனன் துச்சாதனனை நோக்கி இவன் பீமனைப் பார்த்து பயந்து விட்டான். இவன் அச்சத்தை பிறகு போக்குகிறேன். இப்போது நீசென்று அவளை அழைத்து வா" என ஆணையிட்டான்.

தீய எண்ணத்தில் அண்ணனை விஞ்சிய துச்சாதனன் பாஞ்சாலி இருக்குமிடம் நோக்கி விரை[illegible]ந்தான். பாஞ்சாலி அவ[illegible]னைக் கண்டு ஒதுங்க, "அடீ எங்கே செல்கிறாய்?" என கூச்சலிட்டான்.

திரௌபதியும் "நான் பாண்டவர் மனைவி. துருபதன் மகள். இது வரை யாரும் இதனை [illegible] தம்பி...நீயோ வரம்பின்றி பேசுகிறாய்" என்றாள்.

அதற்கு துச்சாதனன். "இனி நீ பாண்டவர்தேவியும் அல்ல. பாஞ் சாலத்தான் மகளுமல்ல, என் அண்ணனின் அடிமை. மன்னர் நிறைந்த அவையில் எங்கள் மாமனுடன் சூதாடி உன்னை தருமன் இழந்து விட்டான். இனி உன்னை ஆள்பவன் துரியோதனனே. அம்மன்னன் உன்னை அழைத்து வருமாறு சொல்ல வந்தேன். பேடி மகனான பாகனிடம் உரைத்தது போல என்னிடமும்சொல்லாது புறப்படு" என்றான்.

அவன் சொல் கேட்ட பாஞ்சாலி, "மாதவிலக்கு ஆதலால் ஒராடையுடன் இருக்கிறேன். மன்னர் அவைக்கு என்னை அழைத்தல் முறையல்ல. மேலும் உடன் பிறந்தார்மனைவியை சூதில் வசமாக்கி ஆதரவை நீக்கி அருமையை குலைத்திடுதல் மன்னர் குல மரபா? உன் அண்ணனிடம் என் நிலையைச் சொல்" என்றாள்.

இதுகேட்ட துச்சாதனன்கோபம்தலைக்கேற, பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றி இழுத்தான். "ஐயோ"என அவள் அலற, அந்தக் கருங் கூந்தலை கரம் பற்றி இழுத்துச் சென்றான்.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தீஸ்கரில் மாவோயிஸ்டுகளுடனான மோதல்

# இந்திய படையினரின் அதிரடித் தாக்குதல்

- 5 பேர் மரணம்; 30 பேர் காயம்
- 18 பேர் காணவில்லை



(டில்லி)

**சத்தீஸ்கர் மாநிலம் பிஜாபூர் மாவட்ட வனப் பகுதியில் மாவோயிஸ்டுகளுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மோதலையடுத்து குறைந்தது 18 பாதுகாப்பு படையினரை காணவில்லை என்று இந்திய அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.**


மாவோயிஸ்டுகளுடனான மோதலின் போது ஐந்து பாதுகாப்பு வீரர்கள் இறந்தனர் மற்றும் 30 பேர் காயமடைந்தனர் என்று சத்தீஸ்கர் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

அதேநேரம் இந்த மோதலில் பெண் மாவோயிஸ்ட் ஒருவரின் சடலமும் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டது.

இது குறித்து சத்தீஸ்கர் பொலிஸ் பணிப்பாளர் ஜெனரல் டி எம்.அவஸ்தி கூறுகையில், சில பாதுகாப்புப் பணியாளர்கள் காணவில்லை. தேடுதல் நடவடிக்கை நடந்து வருகிறது உயிரிழந்த ஐந்து பணியாளர்களில், இருவரின் சடலத்தை நாங்கள் மீட்டுள்ளோம். மூன்று பேரின் சடலம் இன்னும் காட்டில் உள்ளனர் என் றார்.

மாவோயிஸ்டுகளின் கோட்டையாகக் கருதப்படும் தெற்கு பஸ்தார் காடுகளில் உள்ள பிஜாப்பூர் மற்றும் சுக்மா மாவட்டங்களில் இருந்து 2,000 க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படைகளின் தனித்தனி கூட்டுக் குழுக்கள் மாவோயிச எதிர்ப்பு நடவடிக்கையைத் தொடங்கியதாக சத்தீஸ்கர் பொலிஸார் தெரிவித்தனர். (8)

## 130 ஆயிரம் மைல் தூரத்திலிருந்து வந்த சிறுகோள் வெற்றிகரமாகச் செய்து முடித்தது ஜப்பான்





(டோக்கியோ)

ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனம் நம்ப முடியாத காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளது. ரியுகு என்ற சிறு கோளின் ஒரு பகுதியை ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனம் வெற்றிகரமாகப் பூமிக்குக் கொண்டு வந்துள்ளது.

பூமியிலிருந்து சுமார் 130 ஆயிரம் மைல் தொலைவில் உள்ள ஹையபூசா 2 விண்கலத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு காப்ஸ்யூல் தான் ரியுகு சிறுகோளின் மாதிரியைப் பூமிக்குக் கொண்டுவந்துள்ளது.

எந்தவித சேதமும் இல்லாமல் அப்படியே பாதுகாப்பாகத் தரையிறங்கியுள்ளது. இதுவே முதல் முறை என்று பாதிப்பில்லாமல் அசல் சிறு கோள் மாதிரியை விஞ்ஞானிகள் ஆய்வு செய்வது இதுவே முதல் முறையாகும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பத்திரமாக மீட்டெடுக்கப்பட்ட ரியுகு விண்வெளி பாறைகளின் மாதிரி இப்போது அவுஸ்திரேலியாவில் ஒரு ஆய்வகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

ரியுகு போன்ற விண்வெளி பாறைகள், எப்படி இறுதியில் கிரகங்கள் உருவானது என்றும், பூமிஎவ்வாறு உருவானது என்பதை அறியவும், படைப்பைப் பற்றியும் துப்புகளை அளிக்கவும் இந்த மாதிரி பெரிதும் உதவும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-2,863, 719**

**தொற்று :-131,594,945**

**(நேற்றைய நிலவரம்)**

## பங்களாதேஷில் 7 நாட்களுக்கு முடக்கல் அமுல்

(டாக்கா)

பங்களாதேஷில் இன்று முதல் 7 நாட்களுக்கு முடக்கல் நிலையை அமுல்படுத்துவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் 6,830 பேருக்கு தொற்றுறுதியும் 50 பேர் மரணித்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே இன்று முதல் 7 நாட்களுக்கு முடக்கல் நிலையை அமுல்படுத்துவதற்கு பங்களாதேஷ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அந்த நாட்டின் வீதி போக்குவரத்து அமைச்சர் ஒபைதுல் குவாடர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு இதனை அறிவித்தார். (8)

## விருந்து நடந்த வீட்டில் துப்பாக்கிச்சூடு; 3 பேர் பலி!

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் விருந்து நடந்த வீட்டில் மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் வில்மிங்டன் நகரில் வீடு ஒன்றில் விருந்து நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருந்தது. இந்த விருந்தில் 7 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

திடீரென அவர்களை நோக்கி மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ளனர். இந்த சம்பவத்தில் விருந்தில் பங்கேற்ற 3 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காய மடைந்த னர்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படுவார்கள் என தலைமை பொலிஸ் அதிகாரி டானி வில்லியம்ஸ் தெரிவித்தார். (8)

## துறைமுகத்தில் தீ ஒருவர் படுகாயம்

(ஒட்டாவா)

வன்கூவர் துறைமுகத்தில் தானியக் கோபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரு தொழிலாளி படுகாயமடைந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.45 மணியளவில் அலையன்ஸ் தானிய முனையத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டது.

கடும் போராட்டத்திற்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் வந்ததாக வன்கூவர் தீயணைப்பு மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (8)

## டுவிட்டர் நிறுவனத்துக்கு ரூ.85 லட்சம் அபராதம்

(மொஸ்கோ)

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவல்னியை கைது செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றன. உண்மைக்குப் புறம்பான செய்திகளை சமூக வலைத்தளங்களில் பரப்பியது இந்த போராட்டத்துக்கு காரணம் என சமூக வலைத்தளங்கள் மீது ரஷ்ய அரசு அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

போராட்டத்தில் பங்கேற்க சிறுவர்களுக்கு அழைப்பு விடுக்கும் விதமாக பதிவிடப்பட்ட பதிவுகளை நீக்கத் தவறியதாக கூறி டுவிட்டர் நிறுவனம் மீது ரஷ்ய அரசு வழக்கு தொடர்ந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரனை மொஸ்கோ நீதிமன்றில் நடந்து வந்தது. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இறுதி விசாரணையின் போது டுவிட்டர் நிறுவனம் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது.


அதனைத் தொடர்ந்து இந்த வழக்கில் டுவிட்டர் நிறுவனத்துக்கு ஒரு இலட்சத்து 17 ஆயிரம் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.85 இலட்சத்து 85 ஆயிரம்) அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் விடுதலைக்கு எனது அரசே தலையிட்டது

(டில்லி)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பதை தனது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் உறுதி செய்துள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



தேசிய ஜனநாயக்க் கூட்டணி ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையின் பிடியில் எந்த இந்திய மீனவரும் இல்லை என்று அவர் கூறினார்.

அண்மையில் இலங்கையின் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 40 மீனவர்களையும் அவர்களது நான்கு படகுகளையும் விடுவிப்பதற்காக தனது அரசாங்கம் தலையிட்டதாக இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார். (4)

# மாகாண சபை குறித்து முடிவெடுக்க கோட்டா ஏற்பாடு

(கொழும்பு)

ஆளுங் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் விரைவில் முக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது.



மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்து, இறுதி முடிவை எடுக்கும் நோக்கில் பங்காளிகளை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை தீர்மானிக்கப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4)

# தற்போதைய வெப்பமான காலநிலையில் மக்கள் அவதானத்துடன் செயற்படவும்



(கொழும்பு)

அடுத்த சில நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்யாது எனவும் இந்தக் காலப் பகுதியில் நிலவும் வெப்பமான காலநிலையின் தாக்கத்தை குறைக்க மக்கள் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

பணியிடத்தில் பணிபுரியும் மக்கள் முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுக்க வேண்டும், வயதானவர்களையும் நோயுற்றவர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும், இந்த நாட்களில் அதிகப்படியான பணிச்சுமையை குறைக்க வேண்டும்என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குழந்தைகளை வாகனங்களில் தனியாக விடக்கூடாது என்றும் வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடைகளை அணிய வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (4)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி யுவதி கொலை

(கொழும்பு)

கலேவெல, பட்டிவெல சந்தியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. 19 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குடும்ப பிரச்சினை காரணமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)




மிதுலன்





கமல்




றுக்ஷி




தேவன்




வனிதா




சுஜித்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்ததை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக அமைச்சர் பதவியிலிருந்து பந்துல விலக வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தமது பதவியில் இருந்து விலகவேண்டும் என எதிர்க்கட்சிதலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு வர்த்தகத்துறை அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியானது பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது.

மார்ச் மாதத்தில் மாத்திரம் 4,000 கோடி ரூபாய் அச்சிடப்பட்டுள்ளது.

குறித்த நிதி எங்கே செல்கிறது.

இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பும் வழங்கப்படவில்லை, அத்தியாவசிய பொருட்களுக்கான விலையும் குறைக்கப்படவில்லை.

தரமற்ற உணவுப் பொருட்களே சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

எனவே, வர்த்தகத் துறை அமைச்சர் தமது பதவியில் இருந்து விலக வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கைக்கு புதியபெயர் சூட்ட வேண்டும்

(கொழும்பு)

இலங்கையின்பெயரை சிங்களே என மாற்ற வேண்டுமேன பௌத்த பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் பௌத்த பிக்குகள் நேற்றைய தினம் தங்களது பரிந்துரைகளை முன் வைத்திருந்தனர். இந்த பரிந்துரைகளில் நாட்டின் பெயர் சிங்களே என பெயரிடப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீரோஹன தரப்பைச் சேர்ந்த அனுநாயக்க ஓமாரே கஸ்ஸப தேரரே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வரலாற்று காலம் போன்று நாடு மூன்று இராசதானிகளாக பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (4)

# இலங்கையர் இருவர் இத்தாலியில் கைது

(ரோம்)

இத்தாலியில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற் கான விதிமுறைகளை மீறிய இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக் கவசம் அணியாமல் ட்ராம் ஒன்றில் பயணித்து கொண்டிருந்த இலங்கையர்கள் இருவர் அந்த நாட்டு கொரோனா சட்டங் களை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். (4)

# பல்கலைக்கழகங்கள் திறப்பு இன்னும் தீர்மானிக்கவில்லை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களைத் திறப்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்களுக்கான விடுதிகள் தொடர்பில் நிலவி வரும் பிரச்சினை காரணமாகப் பல்கலைக்கழகங்களைத் திறப்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் நீண்ட காலத்திற்குப் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருக்காது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

# தேசத்துரோகிகளை அடையாளம்காண ஐ.நாவின் பிரேரணை உதவியுள்ளது

## என்கின்றார் செஹான்



(கொழும்பு)

இலங்கை மீதான ஐ.நா.தீர்மான வாக்கெடுப்பு முடிவுகள் தாய் நாட்டை உண்மையாக நேசிப்பவர்களையும், பணம் மற்றும் அதிகாரத்துக்காகத் தாய்நாட்டைக் காட்டிக்கொடுக்கத் தயாராக உள்ளவர்களையும் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜெனிவா விவகாரத்தில் தாய் நாட்டின் நலனுக்கு முன்னுரிமை வழங்கிய குழுவினரையும், பணம் மற்றும் அதிகாரத்துக்காக நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லத் தயாராக வுள்ள குழுவினரையும் நாம் அடையாளம் கண்டு கொண்டோம்.

ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதற்குரிய சாத்தியங்கள் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையைப் பயன்படுத்தி சில பிரிவினர் இலங்கையை இழிவுபடுத்த முயற்சிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எதிர்க்கட்சிகள் நாட்டை இழிவுபடுத்தும் முயற்சிகளில் [illegible] (4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆணவக் குரங்கு!

ஒரு காடு அங்கே ஒரு புத்தர் அவர் பாட்டுக்கு நடந்து போய்க் கொண்டே இருந்தார். அவரின் பின்னால் ஒரு குரங்கு அதுவும் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது.

புத்தர் திரும்பிப் பார்த்தார்.

குரங்கு அப்படியே குதித்து உயரே எழும்பி ஒரு கிளையில் போய் உட்கார்ந்தது. ஏன் இப்படி செய்கின்றாய்? என்று கேட்டார் புத்தர்.

என்னை சாதாரணமாக நினைக்க வேண்டாம். நான் மகாமந்தி.. என்னால் எல்லாம் முடியும். முடியாது என்கின்ற வார்த்தையே என்னுடைய அகராதியில் கிடையாது. என்ன வேண்டும் என்றாலும் செய்வேன் என்றது.

அப்படி என்றால் ஒரு பந்தயம் வைத்துக்கொள்ளலாமா? என்றார். ஓ வைத்துக் கொள்ளலாமே என்றது. வேறு ஒன்றுமில்லை. இப்பொழுது நீ மேலே எழும்பி அந்தக் கிளையில் உட்கார்ந்தது மாதிரி அங்கேயிருந்து தாவி என் உள்ளங்கையில் வந்து உட்கார வேண்டும். அவ்வளவு தான் என்றார்.

அப்படி உட்கார்ந்து விட்டால் என்ன பரிசு? என்றது. சுவர்க்கத்திலே இருக்கின்ற மாமன்னன் மரகதச் சக்கர வர்த்தியை என்னுடன் வந்து இருக்கும்படியாக கூப்பிட்டுக் கொள்கின்றேன். அந்த சமயத்திலே அவருடைய அரியணை அங்கே காலியாகிவிடும். நீ அதில் போய் உட்கார்ந்து கொள்ளலாம்.

பந்தயத்தில் தோற்றுவிட்டால் ஒரு கல்ப காலம் இந்த பூமியில் வாழ வேண்டியிருக்கும். அதற்குப் பின்பு தான் என்னிடம் வர முடியும். என்ன சொல்கின்றாய் என்றார்.

குரங்குக்குத் தாவுவது ஒரு பெரிய காரியமா? இது எனக்கு மிகச் சாதாரண விடயம் என்ன இப்பொழுதே தாவட்டுமா? என்றது.

சரி என்று சொல்லி உள்ளங்கையை நீட்டினார். அவருடைய கை தாமரை இலை அளவுக்கு விரிந்தது. குரங்கு சௌகரியமாக வந்து உட்கார்வதற்காக.

குரங்கு தாவுவதற்குத் தயாரானது. அதற்கு முன் ஒரு சிறிய யோசனை. இந்தக் கிளையிலே இருந்து அந்தக் கிளைக்குத் தாவுவது எனக்கு மிகவும் அற்பமான ஒரு வேலை. என்னுடைய கௌரவத்திற்கு இது சரியாக இருக்காது . அதனால் இங்கே இந்தக் கிளையிலேயிருந்து உயர எழும்பி மேலுலகம் போய் அங்கே ஒரு சுற்று சுற்றிவிட்டு அங்கே இருந்து வந்து விடலாம் என்று நினைத்தது.

என்ன யோசிக்கின்றாய்? என்றார் புத்தர்.

ஒன்றுமில்லை இதோ பாய்கிறேன் என்று சொல்லி தாவி உயரச் சென்று விட்டது. கொஞ்ச நேரத்தில் வான் உலகத்திற்கே போய் விட்டது. அங்கே ஐந்து பளிங்குத் தூண்கள் இளஞ்சிவப்பு நிறத்திலே நின்று கொண்டிருந்தது. குரங்கு நினைத்துவிட்டது. புத்தரிடம் போய் இந்தப் பளிங்குத் தூண்களைப் பார்த்தேன் என்று சொன்னால் திகைத்துப் போய்விடுவார். இந்தத் தூணிலே ஏதாவது அடையாளம் செய்துவிட்டுப் போக வேண்டும் என்று அந்தரத்திலே மிதந்து கொண்டே நினைத்தது. உடனே ஒரு தூணிலே எழுதியது.. என்ன தெரியுமா?

ஒரு மகா ஞானி இங்கே வந்துவிட்டுப் போனார் என்று எழுதிவிட்டு அப்படியே கீழே தாவி வந்து புத்தரின் உள்ளங்கையில் உட்கார்ந்தது.

எப்படி பார்த்தீர்களா. வான் உலகத்திற்கே போய் அங்கே இருக்கின்ற ஐந்து பளிங்குத் தூண்களைப் பார்த்துவிட்டு அதிலே நான் வந்த விவரத்தை எழுதி வைத்துவிட்டு வந்திருக்கின்றேன் என்றது.

அப்படியா ? என்றார் புத்தர்.

ஆமாம் சந்தேகமாக இருந்தால் வாருங்கள் அழைத்துக் கொண்டு போய் காட்டுகின்றேன் என்றது குரங்கு. அதற்குத் தேவையில்லை. அப்படியே கொஞ்சம் கீழே குனிந்து பார் என்றார். பார்த்தது...அங்கே புத்தரின் உள்ளங்கை தெரிந்தது. நன்றாக உற்றுப்பார்த்தது. அவருடைய ஒரு விரலில் அது எழுதிய வாசகம் தெரிந்தது. குரங்கு யோசனை செய்தது. அப்படி என்றால் வானத்திலே நான் பார்த்தது புத்தருடைய விரல்களா?

இதைப் புரிந்து கொண்டவுடனே அந்தக் குரங்கின் கர்வம் அழிந்து போய்விட்டது. எங்கள் மனது தான் இந்தக் குரங்கு. மனம் என்பதும் ஆணவம் என்பதும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். மனம் உள்ளவரை ஆணவமும் இருக்கும். மனம் அழிந்தால் தான் ஆணவமும் அழியும். மனம் அழிய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வது இந்த அர்த்தத்திலே தான். எங்களுடைய ஆட்கள் சவால் விடுகின்றார்களாம் வேறு மாதிரி. ஒருத்தன் ஒரு வாய்க்காலை தாண்டுகின்றேன் என்று பந்தயம் கட்டி தாண்ட முடியாமல் வாய்க்காலிலே விழுந்து காலை உடைத்துக் கொண்டு கட்டுப் போட்டுக் கொண்டு வந்தான். ஏன் இப்படி என்று கேட்டார்கள். நான் பந்தயம் கட்டிய நேரம் சரியில்லை என்றான். எப்படி? என்றார்கள். வாய்க்காலிலே தண்ணீர் இருக்கின்ற நேரமாக பார்த்து பந்தயம் கட்டியிருக்க வேண்டும் என்றான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 05 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**மத்திய இலவச தமிழ் வாசிக சாலை சங்கம் உருவாக்கம் (Central free Tamil Library Association)**

மேற்கூறியவாறு, மக்களிடம் விண்ணப்பித்த செல்லப்பா யாழ்ப்பாண மத்திய இலவச தமிழ் நூற்கழகம் சம்பந்தமாக விடுத்த விளம்பரத்தின் வண்ணம், 1934 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாண மக்களின் பகிரங்கக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். பிரமுகர்கள் கூடினார்கள்.

இக் கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சிகளாக நூலகச் சபை ஆரம்பித்தலும் உத்தியோகத்தர் தேர்வும், அமைப்பாளர் செல்லப்பா அறிக்கை படித்தலும், பெரியவர் பேச்சும் இடம் பெற்றன. இக் கூட்டத்திலே பிரமுகர்கள் மத்தியில் அமைப்பாளர், அழைப்பாளர் செல்லப்பாவின் பேச்சு மிக உருக்கமாகவும், உணர்ச்சியூட்டுவதாகவும் இருந்தது. அவ்ருடைய அறிக்கையும் அபிலாசையும் அதில் கலந்து ஒலித்தன. ஆங்கிலத்தில் அவர் எழுதிப்படித்த அறிக்கையின் பொழிப்பு கீழே தரப்படுகிறது.

**1933ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில், சமூகத்தின் கல்வி சார் வளர்ச்சியின் மேல் பற்றுறுதி கொண்ட க.மு.செல்லய்யா எனும் ஒருவரால், யாழ்ப்பாணத்தில் நூலகம் ஒன்றினை அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது. அதனடிப்படையில் குறித்த யோசனைக்கு இணக்கம் தெரிவித்த, நூலக உருவாக்கத்தில் ஆர்வம் காட்டிய தனது நட்பு வட்டத்தில் உள்ளவர்களை உள்ளடக்கி, 1934 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஓர் சிறிய வாசகர் சாலை உருவாக்கப்பட்டது. அன்றைய தினமே மத்திய இலவச தமிழ் வாசிகசாலை சங்கமும் உருவாக்கம் பெற்றது.**

**அமைப்பாளர் செல்லப்பாவின் உரை.**

"ஆசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் தமிழார்வமுள்ள பொது மக்களுக்கும் ஓரளவுக்கு உதவு முகத்தால் இத்தகைய நூலகம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும் என உணர்வேன். பொறுப்பு வாய்ந்த பெரியவர்கள் பலருடன் கலந்தாலோசித்துப் பத்திரிகைகள் மூலம் பணந்திரட்டுவதற்கு முயற்சி செய்தேன்.

"தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வெளியான எல்லா நூல்களையும் விலைக்கு வாங்குவதோடு முக்கியமான ஆங்கில நூல்களையும் வாங்குதல் வேண்டும் என்பது எமது விருப்பமாகும். இந்நூலகம் பரந்த அளவில் உடனுதவும் நிலையமாகவும் பயன் தருதல் வேண்டும். இதற்குப் பழைய ஏட்டுச் சுவடிகளையும் நாம் தேடி வாங்கிப் பாதுகாத்தல் வேண்டும்.

"இந்நூலகத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு நண்பர்களின் ஆலோசனைகளுக்கிணங்கக் குடா நாடெங்கும் நிதிதிரட்டுவதற்கான ஒழுங்கைச் செய்துள்ளதோடு, இலங்கையின் ஏனைய பாகங்களிலும், இன்னும் மலேசியாவிலும் அன்பர்களிடம் சேகரிக்க ஒழுங்கு செய்துள்ளேன். இதுவரை என்னிடம் ரூபா 1184.22 வந்துள்ளது. இதில் பூர்வாங்கச் செலவாக ரூபா 181.81 போக மிகுதி ரூபா 1002.41 இலங்கைத் தேசிய வங்கியில் முதலீடு செய்துள்ளேன்.

**"இந்நூலகத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு நண்பர்களின் ஆலோசனைகளுக்கிணங்கக் குடா நாடெங்கும் நிதி திரட்டுவதற்கான ஒழுங்கைச் செய்துள்ளதோடு, இலங்கையின் ஏனைய பாகங்களிலும், இன்னும் மலேசியாவிலும் அன்பர்களிடம் சேகரிக்க ஒழுங்கு செய்துள்ளேன். இது வரை என்னிடம் ரூபா 1184.22 வந்துள்ளது. இதில் பூர்வாங்கச் செலவாக ரூபா 181.81 போக மிகுதி ரூபா 1002.41 இலங்கைத் தேசிய வங்கியில் முதலீடு செய்துள்ளேன்"- க.மு. செல்லப்பா தனது உரை யின் போது கூறியது.**

"என் நண்பர்களும் பெரியவர்களும் இந்நூலகத்தை உள்ளூராட்சி மன்றத்திடம் அல்லது அரசாங்கத் திணைக்களத்திடம் ஒப்புவிக்கலாம் என்று ஆலோசனை கூறுகிறார்கள். தனிப்பட்ட ஒருவர் தம் பணத்தை இதில் செலவிடுதல் முறையாகாது. எங்கள் தமிழினத்தார் எமக்குப் போதியளவு உதவி செய்வதாகக் கூறியுள்ளார்கள். நூல் நிலையம் நல்ல முறையில் உருவாகும்.

"ஊர்கள் தோறும் வாசிகசாலைகள், நூல்நிலையங்கள் உருவாதல் வேண்டும். அவையாவும் மத்திய நூலகம் ஒன்றோடு ஒருங்கிணைந்து சேவை செய்தல் வேண்டும். கிராம சபைகள் நிறுவப் பெற்றுப் பதினான்கு ஆண்டுகள் கழிந்தும், இன்றுவரை ஒரு கிராமச் சபையாவது எங்காவது இலவச வாசிகசாலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுக்கவில்லை. ஊர் மக்கள் தங்கள் பிரதிநிதிகளிடம் இலவச வாசிகசாலை-நூலகத்தைப் பற்றி வற்புறுத்தல் வேண்டும். யாழ்ப்பாண நகரிலேயே எங்கள் நகரசபை இதுவரை நகர மாந்தர் படிப்பதற்கான வாசிகசாலை அல்லது நூலகம் ஆரம்பிக்கவில்லை. இதனை நகர சபைத் தலைவருக்கு நான் சுட்டிக் காட்டிய பின் அவர் இதற்காவன செய்வதற்கு ஒரு உபகுழுவை அண்மையில் நியமித்துள்ளார்.

**"ஊர்கள் தோறும் வாசிக சாலைகள், நூல்நிலையங்கள் உருவாதல் வேண்டும். அவை யாவும் மத்திய நூலகம் ஒன்றோடு ஒருங்கிணைந்து சேவை செய்தல் வேண்டும். கிராம சபைகள் நிறுவப் பெற்றுப் பதினான்கு ஆண்டுகள் கழிந்தும், இன்று வரை ஒரு கிராமச் சபையாவது எங்காவது இலவச வாசிகசாலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுக்கவில்லை". இவ்வாறு தன் உரையில் க.மு.செல்லப்பா கூறினார்.**

"நான் கல்வி அமைச்சருக்கு நிதியுதவி கோரி விண்ணப்பித்துள்ளேன். அவர் என் வேண்டுகோளைப் பரிசீலனை செய்து வருகிறார். நான் உள்ளூராட்சி மன்றங்களிடையேயும் உதவி நிதிகோரி விண்ணப்பித்துள்ளேன்.

"ஆங்கிலம் பயில்வதற்குப் பலவித வசதிகளோடு கூடிய பெரிய கல்லூரிகள் நிலவுகின்ற அளவுக்குச் செந்தமிழ் பயில்வதற்கு பெரிய தமிழ்க் கல்லூரிகள் எங்கள் நாட்டில் இல்லாமை வேதனைக்குரியதாகும். இன்று வடமாகாணத்தில் ஏறக்குறைய 300 தமிழ்ப் பாடசாலைகள் **V.S.L.C. (Vernacular School Leaving Certificate)** என்னும் வகுப்போடு கல்வித் தரத்தை நிறைவு செய்கின்றன.

மாணாக்கர் தங்கள் **V.S.L.C.** பரீட்சைக்கு விதிக்கப் பெற்ற பாட நூல்களைத் தவிர வேறு நூல்களை மனங்கொண்டு படிப்பதாகத் தெரியவில்லை. இன்று **V.S.L.C.** சித்தியடைந்து ஆசிரியப் பயிற்சி பெற்றுக் கல்வி கற்பிப்போர், ஏறக்குறைய 1500 பேர் வடமாகாணத்தில் வாழ்கின்றார்கள்.

இவர்கள் தம்முள் கலந்து இது வரை ஒரு நூல் நிலையத்தை யாவது உருவாக்கவில்லை.

"இவ்வாறான காரணங்களைக் கொண்டு நாம் எங்கள் நகரில் ஒரு நூல் நிலையத்தை ஆரம்பிக்க வேண்டியது அவசியம் எனக் கருதினோம். எமக்கு வேண்டிய மூலநிதியை நாம் இலகுவாகப் பொதுமக்களிடையே திரட்டிக் கொள்ளலாம். பூநகரி மக்கள் தாராள மனத்தோடு 40 ரூபா திரட்டி அனுப்பியுள்ளார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு ஊரும், ஒவ்வொரு பாடசாலையும், ஒவ்வொரு கிராமச் சபையும், ஒவ்வொரு நிறுவனமும், தனிப்பட்டவரும், தங்களாலியன்றளவு நிதி திரட்டி உதவினால் சிறுதுளி பெரு வெள்ளமாகும் வகையில் பெருநிதி சேரும்.

"நான் இதுவரை பொதுமக்களிடம் நூல் நிலையத்துக்காகத் திரட்டிய பணவிபரம், செலவு விபரம், மிகுதிப் பணம் என்பனவற்றை உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்" என்று தனது நீண்ட உரையை முடித்துக் கொண்டார்.

மத்திய இலவச தமிழ் வாசக சாலைச் சங்கத்தின் நோக்கங்கள் அவர் அறிக்கையில் கண்ட வண்ணம் ஆறு படித்தாயமைத்துள்ளன. அவை,

1. தமிழ்க் கல்வியை மறுமலர்ச்சி செய்து ஊக்கப்படுத்தி வளர்த்தல்.

2. பொது மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்தல்.

3. பழைய ஓலைச் சுவடிகளான ஏடுகளை விலைகொடுத்து வாங்கிப் பக்குவப்படுத்திப் பயன்செய்தல்.

4. தமிழ்மொழி சம்பந்தமான ஆராய்ச்சி முயற்சிகளை வழக்கப்படுத்தி வசதி வாய்ப்பு நல்குதல்.

5. தமிழ்மொழியிலுள்ள நூல்களை வேறு மொழிகளில் பெயர்த்து எழுதியும், வேறு மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் பெயர்த்தும் எழுதியும் பயன் செய்தல்,

6. யாழ்ப்பாணத்தில் ஒரு மத்திய இலவச தமிழ் நூலகத்தையும் வாசிகசாலையையும் அமைத்து நடத்துதல், நூலகம் உடனுதவும் தன்மையில் பிரதானமாகத் தமிழ் நூல்களைக் கொண்டதாகவும், ஓரளவுக்கு ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், பாளி நூல்களைக் கொண்டதாகவும் இயங்குதல் என்பனவாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து வெளியேறுவோருக்கு பி.சி.ஆர்.சோதனை

(கொழும்பு)


தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சொந்த இருப்பிடங்களுக்குச் செல்பவர்களை இலக்காகக் கொண்டு எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

வர்த்தக வலயங்களில் தொழில் புரிபவர்கள் மற்றும் கட்டுமான தொழில் புரிபவர்கள் உள்ளிட்ட குழுவினர் இதில் பிரதானமாக உள்ளடக்கப்படுவார்கள் என்று தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அடுத்த வாரம் தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன. அதன் நிமித்தம் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் தொழில் புரிபவர்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்வார்கள். குறிப்பாக வர்த்தக வலயங்கள், கட்டுமான தொழிலில் ஈடுபடுபவர்களே அதிகளவில் கிராம பகுதிகளுக்குச் செல்வர்.

இவர்களில் ஒருவருக்கேனும் கொவிட் தொற்று ஏற்பட்டிருந்தால் அவர்கள் மூலம் கிராமங்களில் வைரஸ் பரவக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது. எனவே தான் இவர்களை இலக்காகக் கொண்டு பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார். (4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## அற்புதம் நிகழ்த்தும் ஸ்ரீசக்கர வழிபாடு

(தொடர்ச்சி)

இவற்றுள் முக்கோணம், எட்டுக் கோணம், இரண்டு பத்துக்கோணங்கள், பதினான்கு கோணங்கள் என்ற ஐந்தும் சக்தி சக்கரங்கள் எனப்படும்.

பிந்து, எட்டிதழ் கமலம், பதினாறிதழ் கமலம், நான்கு கோட்டம் என்ற இந்த நான்கும் சிவசக்கரங்கள் எனப்படும். சக்திக் கோணங்கள் ஐந்தும் கீழ் நோக்கியும் சிவசக்கரங்கள் நான்கும் மேல் நோக்கியும் உள்ளன.

ஸ்ரீசக்கரத்தில் 9 சக்கரங்கள் உள்ளதால் இதற்கு "நவசக்கரம்" என்ற பெயர் உண்டு. மேலும் ஐம்பதொரு கணேசர்கள், சூரியன் முதலான ஒன்பது கிரகங்கள், அசுவினி முதலான இருபத்தேழு நட்சத்திரங்கள், ஏழு யோகினிகள், பன்னிரண்டு ராசிகள், ஐம்பத்தொரு பீட தேவதைகள் என 157 தேவதைகள் ரூபமாக அம்பாள், ஸ்ரீசக்கரத்தில் பூஜிக்கப்படுகிறாள்.

அன்னையைச் சக்கரம் மூலமாக வழிபாடு செய்வது நமது நாட்டின் ஒரு சிறந்த பண்பாடாகும். விதிப்படி சக்கரங்களை வரைந்து பீஜ மந்திரங்களை நிரப்பி இறைவியை எழுப்பி வழிபடுதல் என்பது மேலான கல்வியைப் பெற வழிவகை செய்யும் என்பது பெரியோர்கள் கண்ட உண்மைகளாகும்.

திருமூலர் திருமந்திரத்தில் திருவம்பலச் சக்கரம், திரிபுரைச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாவதிச் சக்கரம், நவாக்கரிச் சக்கரம் ஆகிய சக்கரங்களை விளக்கி அவற்றை வழிபடும் முறையை விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

ஓம் என்ற பிரணவ ஒலிதான் ஸ்ரீசக்கரமானது என்று ஜேர்மன் நாட்டு விஞ்ஞானி எர்னஸ்ட் சால்திரி என்பவர் நிரூபித்துள்ளார்.

பண்டைக் காலத்தில் பழைய சடங்குமுறையைப் பின்பற்றி வந்தவர்கள் இந்தச் சக்கரத்தைப் பயன்படுத்தி வந்ததாக ஆதாரங்கள் உள்ளன.

இந்த ஸ்ரீசக்கரம் பண்டைக்கால இந்தியாவில் உருவாக்கப்பட்ட மிகவும் சிக்கலான கேத்திர கணிதத்தைக் கொண்டதாகும். ஒன்பது கட்டுகள் கொண்ட இந்த ஸ்ரீசக்கரம்தான் அம்பாள் உறையும் இடமாகும்.

அம்பாள் ஸ்ரீசக்கரத்தில் "ஆவரணங்கள்" என்று சொல்லக்கூடிய ஒன்பது சுற்றுக்களின் நடுவில் உள்ள "பிந்து" என்ற புள்ளியாகக் காட்சி தருகிறாள்.

### சக்கர வழிபாட்டு முறை

ஆலயங்களில் அதிகாலை வேளையில் கிழக்கு முகமாக அமர்ந்து எட்டு நாட்கள் தினமும் ஆயிரம் முறை "சௌந்தர்ய லஹரியின்" 11 ஆவது சுலோகத்தை உச்சரித்துவர நன்மைகள் உண்டாகும். மகப்பேறு உண்டாகும்.

நிவேதனப் பொருட்களாக சர்க்கரைப் பொங்கல் அல்லது பாயாசம் இருக்கலாம். பசுவெண்ணெயத் தட்டில் பரப்பி வைத்து ஸ்ரீசக்கரம் பொறித்த தகட்டை வெண்ணெயில் பதித்துத் தேவியை வணங்கித் துதித்த பின்னர் இந்த வெண்ணெயை பிரசாதமாக உட்கொள்பவர்களுக்கு வேண்டியது கிடைக்கும்.

ஸ்ரீசக்கர வழிபாட்டால் தீமை தரும் வினைகள் நம்மை விட்டு ஓடிவிடும். இறைவியின் திருவருள் கைவந்து தீவினைகள் நீங்கும். உலகியல் நன்மைகள் கூடும்.

இறைவியின் அருளால் அஞ்ஞான இருள் அகன்று மெய்ஞானம் உள்ளத்தில் பதியும். எனவே அடுத்த முறை பழைமையான ஆலயத்துக்குச் செல்லும் போது ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதா? என்பதை அறிந்து மறக்காமல் வழிபடுங்கள். நிச்சயம் அற்புதமான பலன்கள் கிடைக்கும். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 268 பேர் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 268 பேர், நேற்று முன்தினம் அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு தொழில் வாய்ப்பிற்காக சென்று, அங்கு பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து, நாடு திரும்ப முடியாமல் இருந்த 268 இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். (4)

## திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

பண்டிகை நாட்களை முன்னிட்டு இக்காலப் பகுதியில் பொது இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி தங்க நகைகள் கொள்ளை, பணப்பைகள் திருட்டு, மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள் திருட்டு பேன்ற சம்பவங்கள் இக் காலகட்டத்தில் அதிகரித்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார். (4)

## சட்டங்களை மீறிய 10 பேர் கைது

(புத்தளம்)

புதையல் அகழ்வு உள்ளிட்ட சுற்றுச் சூழல் சட்டங்களை மீறியமைக்காக 10 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி புத்தளம் மனவேரிய பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்டமைக்காக இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் அகழ்வுக்காக பயன்படுத்திய பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 200 |
| தக்காளி | 90 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 180 | 180 | 200 |
| பூசணி | 60 | 50 | 80 |
| புடோல் | 120 | 90 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 240 | 260 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 90 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 150 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 160 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 1000 |
| போஞ்சி | 180 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 110 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 50-70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 200 | -- | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 100 | -- | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகில் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்கள் தவக்காலத்தினை நிறைவு செய்து இயேசுபிரான் உயிர்த்த ஞாயிறு பெருவிழாவினை அமைதியான முறையில் அனுஷ்டித்தனர்.
(படங்கள்:- சிவசாந்தன், சப்தசங்கரி, ஜோசப் நயன்)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் இரு பிக்கு உட்பட 11 பேர் கைது



(நெளுக்குளம்)

வவுனியா தாலிக்குளம் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 11 பேரை பூவரசங்குளம் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வளாகத்தில் புதையல் தோண்டப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று அதிகாலை குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த இரு பிக்குமார் உட்பட 11 பேரை கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து நிலத்தை தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டதுடன், 2 கார் மற்றும் முச்சக்கர வண்டி என்பவற்றைக் கைப்பற்றினர். கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5-6-299)

## தென்மராட்சியில் 2 பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட இரண்டு பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக கல்வி அமைச்சால் தரமுயர்த்தப்படவுள்ளன.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மற்றும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளும் இவ்வாறு தரமுயரவுள்ளன.

மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றி அவற்றின் வளத்தை பெருக்கி கல்வி அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நடவடிக்கையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் கல்வி அமைச்சுக்கு சிபாரிசு செய்யப்பட்ட 27 பாடசாலைகளில் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட இரண்டு மத்திய கல்லூரிகளுடைய பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

குறித்த 27 பாடசாலைகளும் எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னர் இரு கட்டங்களாக தேசிய பாட்சாலைகளாக தரமுயர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தென்மராட்சி கல்வி வலயத்திற்குள் ஒரே ஒரு தேசியப் பாடசாலை மாத்திரமே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6-30)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறை யாருடையதாக இருந்தாலும் பொறுப்பு நம்முடையது!

- ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அட! தம்பியவ உங்க என்ன நடக்குது!

வலம்புரியின் அலுவலகத்துக்கு நேற்றைய தினம் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. 85 வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் தொலைபேசி அழைப்பை எடுத்திருந்தார். அவர் தொலைபேசியில் கதைத்த உரையாடலை ஏனையவர்களும் அறிவது நல்லது என்பதற்காக அதனை இங்கு தருகிறோம்.

**பெரிய:** ஹலோ! ஹலோ! வலம்புரி பத்திரிகை அலுவலகமோ.

**ஆசிரி:** ஓம்! வலம்புரி அலுவலகம்தான்.

**பெரிய:** நான் கொழும்பில் இருந்து கதைக்கிறன். யாழ்ப்பாணம்தான் என்ர சொந்த இடம். இப்ப கொழும்பில் இருக்கிறன். அது சரி உங்க என்ன நடக்குது?

**ஆசிரி:** எதை ஐயா கேட்கிறியள்.

**பெரிய:** யாழ்ப்பாணத்தில கொரோனா எப்படி இருக்குது எண்டு கேட்கிறன். ஏதோ முல்லேரியாவில பிசிஆர் பரிசோதனை நடக்கிறதாகச் சொல்லுகினம்.

**ஆசிரி:** முல்லேரியாவிலும் பிசிஆர் பரிசோதனை செய்யலாம். ஆனால் யாழ்ப்பாணத்திலும் பரிசோதனை நடக்குது.

**பெரிய:** அப்ப யாழ்ப்பாணத்தில செய்கிற பிசிஆர் பரிசோதனையும் முல்லேரியாவில செய்யிற பிசிஆர் பரிசோதனை முடிவுகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்குதோ!

**ஆசிரி:** அப்படி ஒன்றும் நாங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை ஐயா! ஆனால் சில வேளை எங்கள் சுகாதாரப் பகுதியினர் பார்த்திருப்பினம்

**பெரிய:** என்ன தம்பி சொல்லுறியள். கொரோனா வந்தவர்களை ஏற்றிக் கொண்டுபோய் கிளிநொச்சியில வைத்திருந்து ஏழு நாளில அவர்களை வீட்டுக்கு அனுப்புகினம் எண்டால், என்ன பொருள்.

**ஆசிரி:** நாங்களும் அறிந்தம். ஆனால் கொரோனாத் தொற்றாளர்களைத் தங்க வைக்கிறத்தில இடப்பிரச்சினை இருக்குதாம். அதுதான் கொரோனாத் தொற்றாளர்களை ஏழு நாள் முடிய அவரவர் வீட்டுக்கு அனுப்புகிறதாக அறிந்தம்.

**பெரிய:** என்ன சொல்லுறியள். இதுவொரு கதையோ! கொரோனாத் தொற்றாளர்களைத் தனிமைப்படுத்தி அவர்கள் சுகமடைந்த பிறகல்லோ அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேணும். ஏழு நாளையால வீட்டுக்கு அனுப்பினால் வீட்டில இருக்கிறவியள், அயல் அட்டம் எல்லாருக்கும் கொரோனா வருமல்லோ.

**ஆசிரி:** நீங்கள் கூறுவதில் உண்மை இருக்குதான்.

**பெரிய:** தென்பகுதியில இருந்து கொரோனாத் தொற்றாளர்களை கோப்பாய்க்கு கொண்டு வந்தவியள். ஆனால் இப்ப யாழ்ப்பாணத்தில இருக்கிற கொரோனாத் தொற்றாளர்களைத் தங்க வைத்துப் பராமரிப்பதற்கு இடப்பற்றாக் குறை எண்டால், உங்க என்ன நடக்குது எண்டு கேட்க வேண்டாமோ!

**ஆசிரி:** மௌனம்...

**பெரிய:** யாழ்ப்பாணத்தில இதுவரை எத்தனை பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்குது எண்டு ஒருக்கா கூட்டிப்பாருங்கோ
அந்த எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கையில இடப்பற்றாக்குறை எண்டால், வெளியில சொல்லாமல் ஏகப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் இருக்கினமோ! அல்லது ஏழாம் நாள் கொரோனாத் தொற்றாளர்களை வீட்டுக்கு அனுப்பி கொரோனா உற்பத்தி செய்யிற நோக்கமோ! முடிஞ்சால் ஒருக்கா அறிந்து பாருங்க.

*இவ்வாறு கூறியபடி அந்தப் பெரியவர் தொலைபேசி அழைப்பை நிறுத்திக் கொண்டார். அவரின் உரையாடலை சம்பந்தப்பட்டவர்களுக்குச் சமர்ப்பணம் செய்கிறோம்.*

## கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வலி. தென்மேற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண் சிகிச்சை முகாமில் சுமார் 112 பேர் கண்பரிசோதனை மேற்கொண்டனர்.

தமிழ் உலகத் தந்தை என அழைக்கப்படும் தந்தை செல்வநாயகத்தின் ஞாபகார்த்தத்தை யொட்டி வலி.தென் மேற்கு பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் 112 பேர் பயனடைந்தனர் என இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினரும் தந்தை செல்வா ஞாபகார்த்த நற்பணி மன்றத்தின் ஸ்தாபகருமான கணபதிப்பிள்ளை தளையரட்ணம் தெரிவித்தார்.

வலி. தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சி. மகேந்திரன் தலைமையில் பண்டத்தரிப்பு வை.எம்.சி.எ. மண்டபத்தில் கண் சிகிச்சை முகாம் இடம்பெற்றது.

அதில் மூக்குக் கண்ணாடி தேவை யானவர்களுக்கு மூன்று வாரங்களில் கண்ணாடி வழங்கப்படும் என நற்பணி மன்றத் தலைவர் தெரிவித்தார்.(5-6)

வவுனியா காட்டுப் பகுதியில்

## பாரிய மரக்கடத்தல் முயற்சி முறியடிப்பு

(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுவிளாங்குளம் காட்டுப் பகுதியில் பாரிய மரக்கடத்தல் முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் பெறுமதியான 50 முதிரை மரக்குற்றிகள் காட்டுப் பகுதியில் வெட்டப்பட்டு ஏற்றுவதற்கு தயாராக காணப்பட்டது.

இந்நிலையில் மரங்களை வெட்டிய சந்தேக நபர்களோ வாகனங்களோ அவ் இடத்தில் இல்லாத நிலையில் பொலிஸார் மரக்குற்றிகளை பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றி வந்துள்ளனர். இந் நிலையில் குறித்த மரங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஞா-299)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நெடியகாடு பொலிகண்டி, நாவலடி ஐஸ் தொழிற்சாலை பொலிகண்டி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** இரணைப்பாலை, கோம்பாவில் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், ஆச்சிபுரம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்) கூமாங்குளம், சாய் சிறுவர் இல்லம், கூமர சங்குளம் மாதா கோவிலடி மறக்காறம்பளை-கணேசபுரம், மதுரநகர் கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம், தவசிக்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்திய மீனவர்களை அனுமதித்தால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோம்

### அகில இலங்கை மீனவர்கள் சங்கம் எச்சரிக்கிறது

(கொழும்பு)

இந்திய மீன்வர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்படுமாயின் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை மீனவர்கள் சங்கத்தின் தலைவர் ரத்ன கமகே இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்குவதற்காக சிலர் முயற்சித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் உள்நாட்டு மீனவர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

எனவே, இந்த செயற்பாடுகளுக்கு தமது சங்கம் கடும் எதிர்ப்பினை வெளியிடவுள்ளதாக அகில இலங்கை மீனவர்கள் சங்கத்தின் தலைவர் ரத்ன கமகே குறிப்பிட்டுள்ளார். (4)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எல்லாம் நன்மையே



துன்பத்தை மாத்திரம் நினைத்துக் கொண்டிருந்தால் அது தொல்லையாகவே இருந்திருக்கும். அது மாத்திரம் அன்று ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடக்கிறபோது காலத்தாலும், இடத்தாலும் எல்லாம் வல்ல இறைநிலையானது ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கக் கூடிய அறிவுரை, அனுபவ உரை, அனுபவ ஞானம் அப்படித்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டோமானால் எந்தத் துன்பத்துக்கும் காரணத்தைக் கண்டுபிடிக்கிறபோது இதிலிருந்து விளையக் கூடிய நன்மையெல்லாம் விளங்கி விடும். உண்மையில் எல்லாம் நன்மையாகத் தான் ஏற்படும்.

அப்படிப் பார்க்கின்றபோது துன்பம் வருகிறது என்று கவலைப்படுகிறோமே, துன்பம் வரக்கூடாது என்று எண்ணுவதால் தான் அந்தக் கவலை. துன்பம் என்றால் மனதுக்கு ஒவ்வாதது அல்லது உடலில் நோய், இது இரண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். இது எங்கே போகும்? மனிதனிடம் தானே வரவேண்டும். இடம் கொடுக்கக்கூடிய மனிதனிடம் தானே வரும். என்னிடம் அந்தத் துன்பம் வந்தது என்றால் அதற்கு நான் இடம் கொடுத்துவிட்டேன் என்று தானே பொருள். இப்போது அந்த இடத்தை நிரப்ப வேண்டும்.

நான் பிறந்தேன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஒரு நாளைக்கு முடியப் போகிறேன். இதற்கு மத்தியில் எவ்வளவு தான் இருந்த போதிலும் கூட, சீரணிக்கக் கூடிய அளவிற்கு மேல் சாப்பிடப் போவதில்லை உடல் தாங்குகிற அளவுக்கு மேல் துணியைப் போடுவதில்லை நின்றால் கால் அளவு, படுத்தால் உடலளவு இதற்கு மேல் பூமியை அனுபவிக்கக் கூடியவர்களும் இல்லை. வரும்போது கொண்டு வருவதில்லை. போகும்போது கொண்டு போகப் போவதும் இல்லை. இந்த உண்மையை அப்படியே மனதிலே ஏற்றிக் கொள்ளுங்கள். அப்போது நமக்கு எந்தெந்த இடத்திலே என்னென்ன கிடைக்கிறதோ, அது நிறைவாகத் தான் இருக்கும். வாழ்க்கையை ஒட்டிப் பார்த்தீர்களானால், எல்லோருக்கும் நிறைவாகத் தான் இருக்கிறது. இப்படியே உ[illegible]னால் எந்த இடத்திலும் யாருக்கும் குறைவே கிடையாது. குறைவு என்பதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்களை புறக்கணித்துவிட்டு வெளிநாடு சென்றார் மைத்திரி

## பேராயர் கர்தினால் சாடல்

(கொழும்பு)

**ஒரு பயங்கரவாத தாக்குதல் நடக்கும் என்ற உடனடி தகவல் கிடைத்த போதிலும், தனது பொறுப்புகளை புறக்கணித்து வெளிநாடு சென்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரி மீண்டும் தேர்தலில் போட்டியிட தயாராகின்றாரா? என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வி எழுப்பியுள்ளார்.**



தங்கள் கடமைகளை மறந்து, மக்களின் இறப்பை அனுமதித்தவர்கள் மறுதேர்தலுக்குத் தயாராக இருப்பது வெட்கக்கேடானது என்றும் பேராயர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறான நேற்று பல தேவாலயங்களுக்கு விஜயம் செய்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஊடகங்களுக்கு இதை குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் முன்னாள் ஜனாதிபதி குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க தாமதப்படுத்தக்கூடாது என்றும் கூறினார்.

அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் ஏன் பல மாதங்கள் மற்றும் பல ஆண்டுகளாக காத்திருக்கின்றன என்று கேள்வி எழுப்பிய அவர், தாமதப்படுத்தாமல் பரிந்துரைகளை விரைவாக செயற்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார். (4)

# பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

தவறிழைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறுவது, பொலிஸ் திணைக்களத்தின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையைப் பாழ்படுத்தும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரிகளின் மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையில், எந்தவொரு சூழ்நிலையிலும் சட்ட வரையறைகளை மீறி, பொலிஸ் அதிகாரத்தைப்பயன்படுத்தக்கூடாது.

பொலிஸ் அதிகாரிகளின் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்து, பொலிஸ் திணைக்களம் மீதான நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் தாம் தொடர்ந்தும் கண்காணிப்புடன் இருப்பதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (4)

# விஷமேறியதில் தாய்-மகன் பலி

(பொலநறுவை)

பொலநறுவை - பிஹிடி வெவ, நுவரகல பிரதேசத்தில் தாய் மற்றும் மகன் ஆகியோ ரின் உடலில் விஷமேறி உயி ரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம் பெற் றுள்ளது.

இதன்போது 6 வயதுடைய மகனும், 28 வயதுடைய தாயுமே இவ்வாறு உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இது தற்கொலையா? அல் லது கொலையா? என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# நஞ்சருந்தி குடும்பஸ்தர் தற்கொலை

(திருமலை)

திருகோணமலை - மஹதிவுல்வெவ பிரதேசத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

குடும்பத் தகராறு காரணமாக நஞ்சருந்திய நிலையில் வீதியோரத்தில் கிடந்த குறித்த நபரை மீட்டு மஹதிவுல்வெவ வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)

# தமிழ் கல்வி அமைச்சு நீக்கப்பட்டமை

## மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சு நீக்கப்பட்டுள்ளமையானது மலையக மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.


தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், " இலங்கையில் மத்திய மாகாணத்தில் 522 தமிழ் பாடசாலைகளும், ஊவா மாகாணத்தில் 222 தமிழ் பாடசாலைகளும் உள்ளன. இவ்விரு மாகாணங்களிலும் தமிழ்மொழி மூல கல்வி மேம்பாட்டுக்காக தமிழ் கல்வி அமைச்சுகள் உருவாக்கப்பட்டிருந்தன.,

1988 இல்தான் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மலையக மக்களுக்கானதொரு உரிமையாக இவை கிடைக்கப்பெற்று வந்தன.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இன்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு இல்லாது செய்யப்பட்டது.

தற்போது ஊவா மாகாணத்திலும் தமிழ்க்கல்வி அமைச்சும் பறிக்கப்பட்டுள்ளது. இது பெருந்தோட்ட மக்களுக்கு செய்யப்படும் அநீதியாகும். மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்.

தமிழ்க் கல்வி அமைச்சு



இருந்தால் கல்விப்பணிப்பாளர் நியமனம், ஆசிரியர் நியமனம், சிற்றூழியர் நியமனம் பல பல விடயங்களை செய்யலாம். தமிழ்மொழி மூல கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.

தற்போது அந்த அமைச்சு இல்லாமல் செய்யப்பட்டமையானது கல்வி வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்." என மேலும் தெரிவித்தார். (4)

# தேவாலயத்துக்குள் நுழைய முயன்ற இருவர் கைது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகளும் திருப்பலி பூஜைகளும் இடம்பெற்றன.

இந்நிலையில், தேவாலயங்களிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில் களுத்துறை-ஹொரணை கல் எதடுகொட சென். பொரஸ்ட் தேவாலயத் துக்குள் அத்துமீறி நுழைவதற்கு முயன்றனர் என்றக் குற்றச் சாட்டின் கீழ், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹொரனை பொலிஸார் தெரிவித்தனர். (4)

# துறவறத்திற்கு சென்றால் குடும்பங்களுக்கு அரசதொழில்

(கொழும்பு)

பௌத்த சாசனத்திற்குப் பிள்ளைகளை துறவறம் பூண வழங்கும் குடும்பங்களின் தேவைக்கு அமைய அரச தொழில் வாய்ப்புகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற கிராமத்துடன் உரையாடல் நிகழ்ச்சியின் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பௌத்த சாசனத்திற்குப் பிள்ளைகளை வழங்கிய குடும்பங்களுக்குத் தொழில் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (4)

# 13,320 வழக்குகள் பதிவு

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள்கள் மூலம் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்க கடந்த 72 மணி நேரத்தில் நாடு முழுவதும் விசேட சோதனை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதில் வீதியில் பயன்படுத்த தகுதியற்ற 450 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

மேலும் இந்த காலக்கட்டத்தில் 13,320 வழக்குகள் பதியப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வலய...

இதன்மூலம் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வாரம் சிறப்பு விடுமுறை வழங்கப்படுவதாக எல்.இளங்கோவன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி வரை யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய சிறப்பு விடுமுறை இன்று தொடக்கம் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்படுகிறது.

இதன்மூலம் யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பிக்கும் போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஞா-18,33)

## மீண்டார்...

துள்ளார்.

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தொற்றுநோய் சிகிச்சை மையத்தில் மணிவண்ணனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், தொற்றிலிருந்து மீண்டுள்ள அவர் நேற்று சிகிச்சை மையத்திலிருந்து வீடு திரும்பியுள்ளார். (ஞா)

## இளைஞன்...

யாழ்.வடமராட்சி கிழக்கு - குடத்தனைப் பகுதியில் வீட்டில் தனிமையில் இருந்த இளைஞன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. குடத்தனை - தரவை பகுதியைச் சேர்ந்த மு.சுலக்சன் (வயது-23) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா)

## 2 பேர்...

இருவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 581 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## மாகாண சபை...

தரப்பினரது குறுகிய நோக்கிற்காக இரத்து செய்ய முடியாது.

மாகாண சபைத் தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. தேர்தல் முறைமைக்கு தீர்வு கண்ட தன் பிறகு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

மினுவாங்கொட பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது. பழைய தேர்தல் முறையிலா அல்லது புதிய தேர்தல் முறையிலா மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்ற சிக்கல் நிலை காணப்படுகிறது.

இதற்கு கடந்த அரசாங்கத்தின் அரச தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என கூறிக் கொள்பவர்கள் மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்றார். (ஞா)

## தமிழர் தேசத்தில்...

பொது அமைப்புகள் மற்றும் சம்மேளனங்கள் கூட்டாக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளன.

இதற்கு தமிழ்த் தேசிய கட்சிகள் பொது மக்கள் அனைவரும் ஆதரவு வழங்குவதுடன் இன்றைய தினம் அனைவரும் தங்களின் வீடுகளிலும் பொது இடங்களிலும் வணிக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும் உங்கள் உடைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்தும் துக்கத்தை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## இராமநாதன்...

மாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பினை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாகவே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (ஞா-18,33)

## இராமநாதன் கல்...

அதிபருக்கும் ஆசிரியர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றைய பிசிஆர் முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் குறித்த கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இன்றைய தினம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (ஞா-18,33)

## 2ஆம் கட்டமாக...

இது குறித்து மேலும் அவர் கூறுகையில்,

வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பான கரிசனை எமக்கும் உள்ளது. ஆனால் சுகாதார பாதுகாப்பு நடைமுறை அனைவருக்கும் பொதுவானதாகும்.

அதில் எந்தவொரு நெகிழ்வுத் தன்மையையும் காட்ட முடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே இன்று யாழ்.மாநகர எல்லைக்குள் உள்ள வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பிசிஆர் பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

குறித்த பரிசோதனை முடிவுகள் சாதகமாக அமையுமாக இருந்தால் புதன் அல்லது வியாழக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை திறப்பது குறித்து சாதகமாக பரிசீலிக்கலாம் என பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

## அரசு நிராகரிக்...

அரசியல் தேவைக்காகவே எதிர்ப்பதாக கூறி எதிர்வாதம் செய்து கொண்டிருக்கின்றது. ஆனால் இலங்கை அரசாங்கத்தினால் அத்தீர்மானத்தினை நிராகரிக்க முடியாது.

காலப்போக்கில் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சூழல் ஏற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படும் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களா என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடத்தில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஞா)

## 8...

டுள்ளது.

வவுனியா வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 7 பேர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த ஒருவர் என் எட்டு பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா-250)

## வடக்கில்...

றும் யாழ்.பல்கலைகழக மருத்துவபீடம் ஆகியவற்றில் நேற்று சுமார் 668 பேருடைய பிசிஆர் மாதிரிகள் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது யாழ்.மாவட்டத்தில் 12 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது எனப் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார். (ம-3)

## கடலில் விழுந்து...

பர்களுடன் பொழுதுபோக்கிற்காக படகில் பயணித்த இளைஞன் கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த கெனடி பிறின்ஸ்ரன் (வயது-24) என்ற இளைஞன் நண்பர்களுடன் படகில் பயணித்துள்ளார்.

இடைநடுவில் படகிலிருந்து அவர் தவறிவீழ்ந்தபோது படகின் இயந்திரத்தின் சுழலி வெட்டியதில் அவர் படுகாயம் அடைந்து கடலில் மூழ்கியிருக்கின்றார்.

மூன்று மணி நேரத்துக்கும் மேலாக சுழியோடிகளின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் பின்னர் அவருடைய உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அவருடைய உடலம் நோயாளர் காவுவண்டி மூலம் மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஞா)


தன நிதானய
திகதி - 2021.04.04
சீட்டிழுப்பு இலக்கம் - 484
P 24 29 31 45
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4326
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9436

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 04.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2742
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 21 39 55 80
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/04/04
சீட்டிழுப்பு இலக்கம் 4447
ஆங்கில எழுத்து N | வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 9 0 4 5 8
தேசிய லொத்தர் சபை

தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 33 திகதி 04/04/2021
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 15 27 32 87
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 04/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 328
ஆங்கில எழுத்து H | வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 20 28 34
NATIONAL LOTTERIES BOARD

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1243
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 04.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 125,068,870
வெற்றி இலக்கங்கள் 03 45 68 76 ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3578
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 04.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,977,904
வெற்றி இலக்கங்கள் 08 34 36 64 ஆங்கில எழுத்து J
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 22,02,626/=
திகதி : 04.04.2021
வெற்றி வாரம் : 3124
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 38 41 42 44 மிதுனம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,207,580

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1417 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 04/04/2021 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 46 50 68 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,372,922/=
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

கப்ருக
சீட்டிழுப்பு வாரம் 711
வர்ணம் மஞ்சள்
திகதி 04.04.2021 ஞாயிறு
S 18 24 29 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,266,075
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
**தரகர் தேவையில்லை.**
(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்) (6466)

**077 288 0152**
**077 623 4204**
**077 235 2656**

## பழைய கேற் தேவை

நல்ல நிலையில் உள்ள பழைய கேற் (11 அடி) தேவை.

தொடர்பு
**078 423 9984**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## VACANCY

MANAGER, WEB DESIGNER, CLARK WITH COMPUTER KNOWLEDGE. (6464)

**072 240 1423**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-1807)

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் காணி வாடகைக்குத் தேவை. (3925)

**076 678 7288**
**077 759 0427**

## யாழ் கிளை தற்காலிக இடமாற்றம்



V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை
COVID-19 யாழ் நகர முடக்கம் காரணமாக

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இல் இயங்கிவந்த எமது யாழ் கிளை மறு அறிவித்தல் வரை
College Of International Migration Skills
49A, சப்பல் வீதி
யாழ்ப்பாணம்
(யாழ் பொது நூலகம் அருகில்)
இல் இயங்குகிறது
(C-1807) 0768226241

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**



**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- **076 443 1576** (C-1871)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (6462)

**076 702 3565**

## வெல்டிங் வேலைக்கு ஆட்கள் தேவை

சிறந்த அனுபவம் வாய்ந்த வெல்டிங் வேலையாட்கள் தேவை.
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.** (6451)

**077 592 5088**

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1841)
0768226240 DHL

## அண்ணா

EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை


3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1842)
070 3305500
077 888 9388

| | | | |
|---|---|---|---|
| 976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 09 . 1940



மறைவு
01 . 04 . 2021

## திருமதி சின்னம்மா பாலசிங்கம்
(காமாட்சி)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் அச்சுக்கூட ஒழுங்கை மற்றும் குளப்பிட்டி வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா பாலசிங்கம் (காமாட்சி) கடந்த 01.04.2021 (வியாழக்கிழமை) இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெனகாம்பிகை, ஜெகதீஸ்வரன் மற்றும் ஜெயானந்தி, ஜெயகுமார் (ஜேர்மனி), ஜெயபாலன் (அமெரிக்கா), ஜெயதாசன், ஜெயபிரதா ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயபாலி (ஜேர்மனி), உஷா (ஜேர்மனி), ஷண்முகப்பிரியா (அமெரிக்கா), செல்வாஜினி, சிறிஅமலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீப் (ஜேர்மனி), அனுஷியன் (ஜேர்மனி), சுதர்சன், சுலக்ஷன், சுஜீதன், சுதர்ஷினி, செயந்துர்யன், துலக்ஷிகா, கீர்திகா, ஜெனுஷன் (அமெரிக்கா), ஜெய்ஷா (அமெரிக்கா), அபிநயா, ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திலக்ஷன், நிர்த்திகா, றியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 01.04.2021 (வியாழக்கிழமை) அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6460)

குளப்பிட்டி வீதி,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர்க் காணிக்கை



அருட்பணி
## நீ. மரியசேவியர்

ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனே
புகழ்பூத்த அருளாளனே கலைமுதனே
மரியசேவியர் அடிகளாரே!
மண்ணிலே துஞ்சிடினும் மங்காத நின்பணி
விஞ்சி நின்று சொல்லும் நின்பெயரை
கலையுலகம் வாழ்த்த இறைசமூகம் போற்ற
நிலை வாழ்வு நீ அடைய
நிமலனை வேண்டுகிறோம்.

பழைய மாணவர் சங்கம்
புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.
(C-1885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.